விலை ரூபா 1-50

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 | ஆவணி 13 | ஜ்முஹரம் 3 | இதழ் 183

யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 29-8-1987

## "ஒப்பந்தத்தின் விளைவுகள் பயங்கரமாகவிருக்கும்!" - கே. இரத்னயக்கா

[யாழ்ப்பாணம்]

"இலங்கை- இந்திய- ஒப்பந்தம் மூலம் தற்போது ஏற்பட்டுள்ள அமைதியான நிலைமை எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் இரத்தவெள்ளத்தின் அறிகுறி இந்த ஒப்பந்தம் மூலம் சமாதானம் ஏற்பட்டுவிட்டதாக எவரும் நம்பிவிடக்கூடாது:"

யாழ். நாவலர் மண்டபத்தில் இலங்கை- இந்திய ஒப்பந்தம் பற்றி புரட்சி கம்யூனிஸ்ட் கழக யாழ். கிளை நடத்திய கூட்டத்தில் கழக மத்திய குழு உறுப்பினர் திரு. கே. இரத்னயக்கா இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது; "1947 ம் ஆண்டு சகல இன மக்களுக்கும் அரசியல் அமைப்பு அமைக்கப்பட்டது. அதன்பின்னர் இனக்கலவரங்கள் ஏற்படவில்லையா? "புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்" இந்த ஒப்பந்தத்தை முற்றுமுழுதாக நிராகரிக்கிறது. இந்த ஒப்பந்தத்தினால் சமாதானத்தை ஏற்படுத்திவிடமுடியாது இந்த ஒப்பந்தந்தான், இனங்களிடையே மேலும் மோதல்களை ஏற்படுத்தப்போகிறது.

"நீண்டகாலம் நீடித்த யுத்தம் அரசுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. தொழிலாளரின் நிலைமை பயத்தை ஏற்படுத்தியது. இப்போராட்டம் சமூகப் புரட்சியாக வெடித்துவிடும் என்பதை இலங்கை-இந்திய முதலாளித்துவ அரசுகள் விளங்கிக் கொண்டன. இதனால் அவர்கள் ஒத்துழைப்பு வளர்ந்து ஒப்பந்தம் உருவானது"

# ★ இலங்கை கடற்படை கைப்பற்றிய 18 படகுகள், 50 'அவுட்போர்ட்' இயந்திரங்களை மீளளிக்க முடிவு

(அனந்த்—செந்தில்)

**இலங்கைக் கடற்படையினரால் கடந்த காலங்களில் வடபகுதி கடற்றொழிலாளரிடமிருந்து கடலில் வைத்துக் கைப்பற்றப்பட்ட சுமார் ஐம்பது 'அவுட்போர்ட்' இயந்திரங்களும், 18 மீன்பிடிப்படகுகளும் மீளக் கையளிக்கப்படவுள்ளன.**

**இவற்றின் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களுடன் காங்கேசன்துறை ஹாபர்வியூ முகாம் கடற்படைப் பிரிவில் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.**

காங்கேசன்துறை 'ஹாபர் வியூ' முகாமில் உள்ள இலங்கைக் கடற்படைப் பிரிவைச் சேர்ந்த லெப்டினன்ட் இலங்கக்கோன் ரமறகண்ட தகவலை வெளியிட்டார் அவர் மேலும் தெரிவித்ததாவது:- "கடந்த காலங்களில் அமுலிலிருந்த வடபகுதி கடல்வலயச் சட்டங்களின்கீழ் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட வடபகுதிக் கடற்றொழிலாளர்களின் மீன்பிடிப் படகுகள், 'அவுட்போட்' இயந்திரங்களை உரியவர்களிடம் மீளக்கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

"சுமார் '50 அவுட்போர்ட்' இயந்திரங்கள், 18 மீன்பிடிப் படகுகள், தற்போது கடற்படையினரிடம் உள்ளன. இவை பல லட்சரூபா பெறுமதியானவை

"கைப்பற்றப்பட்ட இம்மீன்பிடிச் சாதனங்களில் சில ஏற்கனவே உரிமையாளர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. எஞ்சியுள்ளவற்றைப் பெறவிரும்புவோர் தமது பகுதியைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபரின் அத்தாட்சிப் பத்திரத்துடனும், மற்றும் தமது மீன்பிடிச் சங்கத்தின் அத்தாட்சியுடனும் காங்கேசன்துறை 'ஹாபர்வியூ' முகா

(11ம் பக்கம் பார்க்க)

## நயினாதீவு முகாம் மூடப்படும் காங்கேசனில் புதிய தளம்

[யாழ்ப்பாணம்]

நயினாதீவில் உள்ள மினி முகாம் விரைவில் மூடப்படவுள்ளது. இத்தகவலை இலங்கைக் கடற்படை அதிகாரி ஒருவர் 'ஈழநாடு'க்கு நேற்று தெரிவித்தார்.

நயினாதீவில் உள்ள புத்த விகாரைக்குப் பாதுகாப்பு வழங்கும் நோக்குடன் இம்முகாம் அமைக்கப்பட்டது தெரிந்

(11ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கில் பரவலாக ஆர்ப்பாட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் இடம்பெற்ற ஒப்பந்த மீறல் நடவடிக்கைகளை ஆட்சேபித்து வடக்கு கிழக்கு தமிழ்ப் பிரதேசங்களில் பரவலாக ஆர்ப்பாட்ட நடவடிக்கைகள் இடம் பெற்றன. இன்று காலை வவனியா

(12ம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு நடவடிக்கைக்கு உலக உணவு விவசாய ஸ்தாபனம் உதவும்

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள புனர்வாழ்வு, புனர்நிமானத் திட்டங்களுக்கு பாரிய அளவில் உதவுவதென உலக விவசாய ஸ்தாபனமும், உலக உணவுத் திட்ட ஸ்தாபனமும் இலங்கை அரசுக்கு உறுதியளித்துள்ளன.

தற்போது கொழும்பு வந்துள்ள உலக விவசாய ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சௌமா, நிதி திட்டமிடல் அமைச்சர் றொனி டி மெல்லைச் சந்தித்தபோது

(11ம் பக்கம் பார்க்க)

## உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு இன்று ஆரம்பம்

[கோலாம்பூர்)

உலகத்தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் நாலாவது அனைத்துலக மகாநாடு இன்று சனிக்கிழமை மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் ஆரம்பமாகின்றது.

மலேசிய தமிழர் தலைவரும் மலேசிய பொதுப்பணி அமைச்சருமான மான்புமிகு டத்தோசாமிவேலு மகாநாட்டைத் தொடக்கி வைக்கிறார். மூன்றுநாள் நடைபெறும் இந்த மகாநாட்டில் நாற்பது நாடுகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான தமிழ் அறிஞர்கள் கலந்து கொள்கிறார்கள். மகாநாட்டிற்கு உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்க தலைவர் இர. ந வீரப்பன் தலைமை தாங்குகிறார்

### சிறப்பிதழ் வெளியீடு

நான்காவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு சிறப்

(11ம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகசபை: உறுப்பினர்கள் பெயர் பிரஸ்தாபம்

(கொழும்பு)

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் தனித்தனியாக அமைக்கப்படும் இரு இடைக்கால நிர்வாகசபைகளில் ஒவ்வொன்றுக்கும் விடுதலைப்புலிகள் சார்பில் இருவரும், கூட்டணிசார்பில் ஒருவரும், ஈரோஸ், இயக்க சார்பில் ஒருவரும் இடம்பெறுவார்கள்" என்று கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில தினசரியில் செய்தியொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அச்செய்தியில், இவைதவிர இரு சிங்களவர்களும் இருமுஸ்லிம்களும் இச்சபைகளுக்கு ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைக்கால நிர்வாகசபைகளுக்கு விடுதலைப்புலிகள் சொந்த உறுப்பினர்களை நியமிப்பதைதவிர்த்து வேறு நால்வரை நியமித்திருப்பதாகவும்

[11ம் பக்கம் பார்க்க]

## திருமண அழைப்பு

நிகழும் பிரபவ வருடம் ஆவணி மாதம் 14-ம் திகதி (30-08 87) ஞாயிற்றுக்கிழமை காலை 9-00—11-00மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்.

| எனது சிரேஷ்ட புத்திரன் | எனது கனிஷ்ட புத்திரி |
|---|---|
| **நவரத்தினம்** | **இராஜேஸ்வரி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருமணம் மணமகள் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் நண்பர்கள் உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மணமகனின் தாயார்
**திருமதி மாணிக்கம் சின்னத்துரை**
'இலக்குமி வாசம்'
தையலம்மை வளவு,
ஆனைக்கோட்டை.

மணமகளின் தாயார்
**திருமதி இராசம்மா கதிரவேலு**
சகோதரர்
க. பரமசாமி (ஈழநாடு)
தலையாளி,
கொக்குவில்.

(எ 2132)

## உலகவங்கி அனுசரணையுடன் தொழில்நுட்ப தொழிலதுறை தகுதிகாண் பரீட்சை

### யாழ் தொழில்நுட்பக்கல்லூரியில் விபரங்களைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

மேசன். தச்சுவேலை, மின் இணைப்பு குழாய் பொருத்துதல், கம்பி வளைத்தலும் கட்டுதலும், பாரமான இலேசான இயந்திரம இயக்குதல், மெக்கானிக், நிர்மானி மேற்பார்வையாளர் ஆகிய தொழில் துறைகளில் அனுபவமுள்ளவர்களுக்கான தகுதிகாண் பரீட்சைகளை நடத்துவதற்கு தேசிய தொழிற்பயிற்சிசபை முன்வந்துள்ளது.

உலக வங்கியின் அனுசரணையுடனும் பிரிட்டிஷ் கவுன்ஸிலின் ஆலோசனையுடனும் சர்வதேச தராதரந்துடன் நடத்தப்பட இருக்கும் இப்பரீட்சைக்கு வயதெல்லையோ கல்வித்தரமோ தேவையில்லை எனி

(11ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

முதலாம் குறுக்குத்தெருவில் 2½ பரப்புக்காணியில் சகலவசதிகளும் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 625/10, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 0706)

---

நல்ல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு இரத்தின வாசா, கருவேலடி லேன், (பழைய ஸ்ரேசன் வீதி), கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (சி 0671)

---

சல்லுப்புடுங்கி ஒழுங்கை கொல்லங்கலட்டி தெல்லிப்பழையில் 4 பரப்பு காணியுடன் 4 அறைகள் கொண்ட சகல வசதியுடன் அடங்கிய புதிய வீடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: முருகன் விலாஸ், அம்பனை, உரிமையாளர் S. A. பரந்தாமன் 27 றக்கா வீதி, யாழ்ப்பாணம். (சி 0664)

---

Day old chicks மிகச் சிறந்தஇனங்களான Lohmann சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், Lohmann Broiler குஞ்சுகள், Golden Comets சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் எப்பொழுதும் பதிவுசெய்து குறைந்த விலைக்கு ஒரு வாரத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம். மேரி ஆனந்தன், உரும்பிராய்சந்தி. (சி 0708)

---

பாவித்த வீட்டுத்தளபாடங்கள் பெரியஹோல் செற்றிகள், அல்மாரி கட்டில் மெத்தைகள், Formica சாப்பாடு மேசை கதிரைகள், பிளாஸ்ரிக் கதிரைகள், சோகேஸ், கண்ணாடி மேசைகள், Nursery கபேட், கடை சோகேஸ், கேக் மிக்சர்- National Maulinex மிக்சர் செற், Stand Fan Battery சார்ச்சர், Chopper சைக்கிள், Baby Cot மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு- M. தியாகராஜன் 326, பிரதான வீதி யாழ்ப்பாணம். (சி 0669)

---

Lohmann Pullets and Broilers மிகச்சிறந்த இனமான வருடத்திற்கு 283 தரமான முட்டை இடும் Lohmann சிவப்பு ஒரு வருடத்திற்கு 295 தரமான முட்டை இடும் Lohmann வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், புறோயிலர் குஞ்சுகளும், Golden Comets பேட்டு குஞ்சுகளும், 5-9-87 சனிக்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். தொகையாய் எடுப்போருக்கு விசேட சலுகை உண்டு. உடன் பதிவு செய்யவும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19,முருகேசர் லேன். (சி 0707)

## விற்பனைக்கு

பற்றி சார்ச்சர் 12V- 24-V உடன் விற்பனைக்குண்டு. M தியாகராஜன் 326 பிரதான வீதி,யாழ்ப்பாணம். (சி 0670

---

திருமண பட்டுப்புடவைகள் காஞ்சிபுரம், ½X½, சில்க் அன் சிபோன், கொட்டன், காஞ்சிபுரம் போன்ற நவீன சேலை வகைகளை பெற்றுக்கொள்ள: அரஸ் ஜவுளியகம், 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001. சி-0130

---

நாஷனல் (370, 300. 7000) Funai வீடியோ டெக்கிற்குரிய கவர், வீடியோ கட் மற்றும் சகல உதிரிப்பாகங்களும், சகல ரெலிவிஷன்களின் ரீயூனர், Fly back, கபினெற், மற்றும் உதிரிப்பாகங்கள் உடன் விற்பனைக்குண்டு. Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவைக்கருகாமை), யாழ்ப்பாணம். சி-0667

## தேவை

பிளேட்டின் மெஷின் மைண்டர்கள் தேவை. நேரில் வரவும். செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம். (எ- 2113)

---

கோழிப்பண்ணைக்கு வேலை ஆட்கள் தேவை. தொடர்பு: சீமாட்டி, 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் [சி 0657]

---

பிடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண் விற்பனையாளர்களும், பொறுப்பான வேலைக்கு இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் ஒருவரும் தேவை. தொடர்பு: சீமாட்டி 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி 0629)

---

எமது உற்பத்திப்பொருள்களாகிய ரொபி, இனிப்பு, பிஸ்கட் முதலியனவற்றை வானில் சென்று விற்பனை செய்ய விற்பனையாளர் தேவை. அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். ஒலிம்பிக் இண்டஸ்றீஸ், பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு. (சி-0705)

## வகுப்புக்கள்

G C E. (O/L) டிசம்பர் 87 துரித மீட்டல் ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. 31-08-87 மாலை 4-00 மணிக்கு நேரில் தொடர்புகொள்ளவும் ஆசிரியர் க. கயிலாயநாதன், முன்னாள் அதிபர், ஆசிரியர் கலாசாலை ஆங்கில விரிவுரையாளர், கல்வித் திணைக்கள முன்னாள் ஆங்கில பரீட்சகர். S. T C. A., இல 594 (410), கே கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (சி-0678)

---

## டிப்ளோமா மனையியல் வகுப்புக்கள்

* CAKE ICING * HANDY-CRAFT
* COOKERY * HAIR STYLING
* FLOWER MAKING * KOLAM
* DRESS MAKING
* GLASS & FABRIC PAINTING
& ENGLISH

பயிற்சிகள் யாவும் 9 மாத காலம் நடைபெற்று சிறப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.

தொழில் புரியும் பெண்களின் வசதிக்காக ஞாயிறு வகுப்புக்களும் நடைபெறும்.

விபரங்கட்கு:-

**Ladies' Academy,**

[Regd. No 15918]
VICTORIA ROAD (Near Subhas Tourist Hotel),
JAFFNA

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 31-8-87

(சி 0711)

## விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் மயிலங்காட்டு வீதியில் பலாலி வீதியில் இருந்து 1/4 மையில் தூரத்தில் 20பரப்பு தோட்டக்காணி (தளையன்கலட்டி) விற்பனைக்குண்டு. மற்றும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும். நாகமுத்து தம்பிராசா, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம். [சி0625)

## குத்தகைக்கு

மிருசுவிலிலுள்ள கோழி பாமில் (Farm) 3000 கோழிகளுக்குரிய கூடுகள் வீடு (பெரிய! குத்தகைக்கு உண்டு விபரங்களுக்கு நிக்கலின்பாம் மிருசுவில் அல்லது 27/1, குறுசோல்ற் றோட், யாழ்ப்பாணம். [சி0594]

## சேவை

தாரமிழந்த, விவாகரத்து முடித்த ஆண், பெண்களின் சாதகங்கள் உண்டு மறுமணம் செய்ய விரும்புவோர் தொடர்புகொள்ளவும்:- ABCDE, கந்தர்மடம் (சி-0704)

---

Transformer, மோட்டர், மின் விசிறி, கிறைண்டர் சகல றீவைண்டிங் வேலைகளும் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும் Omega, Manipay Road, Jaffna (சி-0666)

## கல்வி

ஆங்கிலம் கட்டாய பாடம்- வேலை வாய்ப்பு பரீட்சைகளுக்கேற்ப ஆரம்பத்திலிருந்து எழுத, பேச, வாசிக்க வீட்டில் வந்து கற்பித்துத் தாப்படும் தொடர்பு: எஸ் விஜயானந்தன், கல்வளை, சண்டிலிப்பாய் (சி-0697)

---

மானிப்பாய், கொக்குவில் சாவகச்சேரியில் கம்பியூட்டர் கல்வி Computer Programming (Basic) பயிற்சி காலம் 2 மாதம், கட்டணம் 50/- மட்டும் ஆரம்பம்: சனி, ஞாயிறு 30-8-87, திங்கள் புதன் வெள்ளி 31-08-87 சான்றிதழ் (Diploma) வழங்கப்படும். Unikco Computer Center, யாழ். றோட் (சுதுமலைச்சந்தி, மானிப்பாய் கே. கே. எஸ் றோட் [3ம் கட்டை) கொக்குவில். சுஷாந்தி கல்வி நிலையம். 23,டச்றோட், சாவகச்சேரி [சி 0603]

## வகுப்புக்கள்

க பொ. த. (உயர்) 88 கலை, வர்த்தகஓராண்டு வகுப்புக்கள் ஆரம்பம் 29- 08- 87 சனி மாலை 3 மணி. மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. (சி. 0676)

---

20-09-87 நடைபெறவிருக்கும் யாழ் சர்வகலாசாலை கொம்பியூட்டர் பயிற்சி நுழைவுப் பயிற்சிக்கான உளச்சார்புப் பரீட்சைவகுப்புக்கள் 31-08-87 காலை 9-00 மணி தொடக்கம் தினமும் நடைபெறும். Science Centre, Karaveddy. சி-0677

## தவறிவிட்டது

P. கேசவலிங்கம் என்பவருக்குச் சொந்தமான 80 டொலர்ஸ் இல:- EH014590 500 - 503 பிரயாணக்காசோலை யாழ் வின்சர் தியேட்டரிலிருந்து நவீன சந்தைக்கு இடைப்பட்ட பகுதியில் 26-8-87ல் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் 28/1, யாழ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [சி (682)

---

ராணுவ நடவடிக்கையில்

# உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்திற்கு ரூ. 35 லட்சம் நஷ்டம்

[யாழ்ப்பாணம்]

வடமராட்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் உடுப்பிட்டி ப நோ. கூ. சங்கம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அதன் இழப்பு 35 லட்சமென்று மதிப்பிடப்பட்டுள்ளது

அரசு இந்த நஷ்டத்தை ஈடு செய்யும் என்று தெரிவித்திருந்தபோதிலும் இதுவரையில் ஐந்து லட்சம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி தகவல்களை சங்கத்தின் பொது முகாமையாளர் சி குழந்தைவேலு தெரிவித்தார்

33 கிளைகளைக்கொண்ட இச் சங்கத்தின் பல கிளைகள் திறக்க முடியாமல் இருப்பதாகவும், சில கிளைகள் இரண்டு தடவைகள் கொள்ளையடப்பட்டு விட்டதாகவும் அவர் கூறினர்.

[நெ-நி-]

# யாழ்.நகரில் ஒரேபாணியில் தொடர்ந்து நகை கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் வயோதிபப் பெண் ஒருவரிடமிருந்து சுமார் இருபதாயிரம் பெறுமதியான சங்கிலி. காப்பு. மோதிரம் ஆகியன இரு இளைஞர்களால் தந்திரமாக அபகரித்துச்செல்லப்பட்டது

இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பொன்னுத்துரை சுகிர்தம்மா என்ற [64 வயது] வயோதிப பெண் தனது கணவரை ஆஸ்பத்திரியில் அனுமதிப்பதற்காக யாழ் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்சென்று அங்கு அவரை இருக்கச்செய்துவிட்டு கோப்பி வாங்குவதற்காக பஸ்நிலையப் பக்கமாகவுள்ள கடையருகில் சென்றதும் ஒருவர் வீதியிலிருந்துகைக்குட்டையால் சுற்றிக்கட்டியிருந்த ஒரு பார்சலை எடுத்து அப்பெண்ணின் முன்னிலையில் அதைப் பிரித்துப் பார்த்து அதற்குள பணக்கட்டு இருப்பதாகக்கூறி 'நான் எடுக்கும்போது நீங்களும் நின்றபடியால் உங்களுக்கும் பங்கு தரவேண்டும். இவ்விடத்தில் சனக்கூட்டம் இருப்பதால் அப்பால்சென்று எண்ணிப் பகிர்ந்துகொள்வோம் வாருங்கள்' என்று கூறி சனம் இல்லாத பக்கமாக அழைத்துச் சென்று ஒரு உடைந்த கடைக் கட்டிடத்திற்குள் சென்றூர். அங்கிருக்கும்போது வேறொரு இளைஞன் அங்கு வந்து "என் பணத்தை எடுத்துவந்துவிட்டாய்" என்று அந்த வயோதிபப் பெண்ணை அதட்டிக் கேட்டான் அதைத் தொடர்ந்து அப்பெண் தான் அதை எடுக்கவில்லை எனக் கூறவே "நீ எடுக்கவில்லையெனில் உன்

(11ம் பக்கம் பார்க்க)

## பயிற்சி

Telex & I. D. D. Operators இருபாலாரும். (International) - Electric wiring, Radio & Television, Radio Officers (Ship - P M G) தொழிற் பயிற்சியுடன் சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்பம்: 5-9-87. Electros–Thirunelvely Junction. (C 0634)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

**ஆங்கில நெறிக்கான தராதரப்பத்திரப் பரீட்சை–1986**

(CERTIFICATE COURSE IN ENGLISH EXAMINTION-1986 )

(பொதுக் கலைமாணி/ சிறப்புக்கலைமாணி/ வர்த்தமாணி/ நிர்வாகமாணி- பகுதி II

மேற்கூறப்பட்ட பரீட்சை 1987 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 23-ம், 24-ம் திகதிகளில் காலை 9-00—12-00 மணிவரை இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும் முன்னே வழங்கப்பட்ட பிரவேச அட்டையுடன் சமுகமளிக்கவும்.

பதிவாளர்.
(ஏ 2126)

## யாருடையது?

யாழ் மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த திரு. ஸ்ரீஸ்கந்தராசா என்பவர் இரண்டு திறப்புக்கள் கொண்ட கோர்வையைக் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## மணப்பந்தல்

யாழ்.சைவவேளாள தாவர போசன அரசசேவை Higher Grade Foreman மணமகனுக்கு செவ்வாய் குற்றமற்ற 25-29 வயதுக்கிடைப்பட்ட மணப்பெண் தேவை. சாதகம் மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. சி-0698 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். சி-0698

---

யாழ் இந்துவேளாள அவுஸ்திரேலியாவில் வேலைசெய்யும் M Sc எஞ்சினியர் உதயத்தில் செவ்வாய் மணமகனுக்கு அவுஸ்திரேலியாவில் பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். தொடர்பு: AB DE விவாகம்பொருத்துனர், 91/16, இந்துமகளிர் லேன், கந்தர்மடம். சி-0703

---

யாழ் இந்து வேளாள 8ல் செவ்வாய் உள்ள U Kயில் எக்கவுண்டனாக தொழில் புரியும் 28 வயதுடைய மணமகனுக்கு பெண் தேவை U. K யில் இருக்கும்பெண் விருப்பத்தக்கது. தொடர்பு: ABCDE விவாகம்பொருத்துனர், 91/16, இந்துமகளிர் லேன், கந்தர்மடம். சி-0702

---

கலர் பிலிம் சுருள்களை இரண்டு நாட்களில் PROCESSING & PRINTING நவீனமுறையில் செய்து தருபவர்கள்.

**கொழும்பு ஸ்ருடியோ**
**55, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

[5] ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு மாதாந்தம் கலர்பிலிம் சுருள் இனும். ஏ2084

# பிலிப்பைன்ஸில் திடீர்ப் புரட்சி முறியடிப்பு!

## அதிபர் மாளிகை, தொலைக்காட்சி நிலையம் மீது தாக்குதல்!!

### நிலைமை கட்டுக்குள் என்கிறார் 'அக்கியூனோ' இராணுவ முகாம் முற்றுகை; தளபதி பணயம் என புரட்சிப் படைத்தளபதி அறிவிப்பு

மணிலா, ஆகஸ்ட் 28

பிலிப்பைன்ஸில் அதிபர் திருமதி கொறசோன் அக்கியூனோவின் அரசைக் கவிழ்க்க மேற்கொண்ட சதிமுயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

300 புரட்சிப்படைகள் இன்று அதிகாலை அதிபர் மாளிகையையும் அரசுக்குச் சொந்தமான தொலைக்காட்சி நிலையத்தையும் திடீரெனத் தாக்கியபோதிலும் இத்தாக்குதல் அரசுப் படைகளினால் முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மணிலா விமான நிலையத்திற்கு அருகில் உள்ள விமானத் தளத்தின் ஒருபகுதியை தமது படைகள் கைப்பற்றியுள்ளதாகவும் மணிலாவுக்கு 200 மைல் தொலைவில் உள்ள இராணுவ முகாம் ஒன்றைக் கைப்பற்றி அந்த முகாமின் இராணுவத் தளபதியையும் மற்றும் சிலரையும் தமது படைகள் பணயக் கைதிகளாக வைத்துள்ளதாக புரட்சிப்படைத் தளபதி அறிவித்துள்ளார்.

திடீர் புரட்சி முயற்சி முறியடிக்கப்பட்டு தமது படைகள் உடனடியாகவே நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக திருமதி அக்கியூனோ சம்பவம் நடைபெற்ற சில மணி நேரத்தின் பின் வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

#### 12 பேர் பலி; 90 பேர் காயம்!

அரசு படைகளுக்கும் புரட்சிப்படைகளுக்கும் இடையே இடம்பெற்ற கடும் மோதலின்போது 12பேர் பலியானதாகவும் 90 பேர் காயமடைந்ததாகவும் இவர்களில் அநேகர் பொதுமக்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்றதை அடுத்து அதிபர் திருமதி அக்கியூனோ உடனடியாக தமது அமைச்சரவையைக் கூட்டி நிலைமையை ஆராய்ந்தார்.

#### 5வது சதி முயற்சி

முன்னாள் பிலிப்பைன்ஸ் அதிபர் திரு பேர்டினன்ட் மார்க்கோஸின் நீண்டநாள் ஆட்சியை 1986ம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற தேர்தலில் மண்கவ்வச்செய்து ஆட்சியைக் கைப்பற்றிய திருமதி அக்கியூனோவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட 5வதுசதிமுயற்சிஇது என்றும் அறிவிக்கப்பட்டது.

### அக்கியூனோவுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும்

வாஷிங்டன், ஆக-28

பிலிப்பைன்ஸில் தோல்வியுற்ற திடீர்புரட்சிச் சதிமுயற்சிக்குப் பின் ஏற்பட்டுள்ள நிலையை அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கிறதென அமெரிக்க ராஜாங்கத் திணைகளப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதிபர் திருமதி அக்கியூனோ எந்த நிலையையும் சமாளிக்கக் கூடிய ஆற்றல்கொண்டவராக இருப்பதால் தற்போதைய நிலையையும் அவர் சமாளிப்பார் என்றே அமெரிக்கா நம்புகிறது என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

எவ்வாறுயினும் திருமதி அக்கியூனோவின் அரசுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவு வழங்குமென்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

# அக்கியூனோ ஆட்சிமீதான அதிருப்தியே சதிமுயற்சி

## தமக்கு இதில் சம்பந்தமில்லை என்று கூறுகிறார் மார்க்கோஸ்

ஹவாய், ஆக 28

பிலிப்பைன்ஸ் அதிபர் திருமதி அக்கியூனோஆட்சி மீது நாடு பூராவுமுள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்திகாரணமாகவே இந்த சதி முயற்சி இடம்பெற்றுள்ளது. இதற்கும் எனக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை.

இவ்வாறு ஹவாயில் அஞ்ஞாதவாசம் செய்யும் முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திரு பேர்டினன்ட் மார்க்கோஸ் அமெரிக்க தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

புரட்சியை அடுத்துதம்மைச் சந்தித்த தொலைக்காட்சிநிருபரிடம் திரு. மார்க்கோஸ் திருமதி அக்கியூனோவின் அரசு மீதான தமது அதிருப்தியையும் தெரிவித்துக்கொண்டார்.

### ஈரானுக்கு சீன ஆதரவு

தெஹ்ரான், ஆக-28

வளைகுடாவில் வல்லரசுகளின் நடமாட்டத்திற்கு எதிரான ஈரானின் நிலையை சீனா ஆதரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### பாராளுமன்றச் சம்பவம்: லண்டனிலும் விசாரணை

லண்டன், ஆக 28

இலங்கைப் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக ஸ்கொட்லாந்து துப்பறியும் நிபுணர்கள் லண்டனிலுள்ள இலங்கையர் ஒருவரை விசாரணை செய்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

(10ம் பக்கம் பார்க்க)

### ஏழைகளுக்கு சட்டஉதவி லோக சபையில் அங்கீகாரம்

புதுடில்லி, ஆக-28

ஏழை மக்களுக்கு சட்ட உதவி வழங்குவதற்கு வழி செய்யும் புதிய மசோதா ஒன்றை இந்திய லோகசபை நிறைவேற்றியுள்ளது.

ஏழைகளுக்கு சட்ட உதவிகளை வழங்கும் தேசிய,மாநில, மாவட்ட ரீதியிலான சட்ட அமைப்புக்களையும், மக்கள் நீதி மன்றத்தை ஏற்படுத்தவும் இந்த மசோதா வழிவகுக்கும்.

உலகச் செய்திகள்

### வங்காள விரிகுடாவில் 1000 பங்களாதேஷ் மீனவரைக் காணவில்லை!

டாக்கா, ஆக, 28

பங்களாதேஷில் 500 மீன்பிடிப் படகுகளில் மீன் பிடிக்கச்சென்ற 1000 மீனவர்களைக் காணவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்காளவிரிகுடாவில் காணாமல்போன மீனவர்களையும் படகுகளையும் தேடும் பணியில் கடற்படை படகுகளும், விமானங்களும் ஈடுபட்டுள்ளன.

#### 500 பேர் வெள்ளத்திற்குப் பலி

இதேவேளையில் பங்களாதேஷில் வெள்ளத்திற்கு 500 பேருக்குமேல் பலியாகியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 16 ஆயிரம் சுரங்க தொழிலாளர் வேலைநீக்கம்; 30,000 பேருக்கு எச்சரிக்கை

ஜோகனஸ்பேர்க்,ஆக28

தென் ஆபிரிக்காவில் வேலைநிறுத்தம் செய்து வரும் அரசாங்கத் தொழிலாளர்களில் 16 ஆயிரம் பேர் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவின் மிகப் பெரும சுரங்கமான 'ஆங்கில அமெரிக்க' சுரங்கத்தில் மட்டும் 13ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நாளைக்குள் வேலைக்குத் திரும்பாவிடின் அச்சுரங்கத்தைச் சேர்ந்த மேலும் 30 ஆயிரம் தொழிலாளர்களும் வேலை நீக்கம் செய்யப்படுவர் என அந்த நிறுவனத்தின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

## மாருதி கார்கள் இலங்கை வரும்

(புதுடில்லி)

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மாருதி கார்கள் இலங்கை, பங்களாதேஷ், யூகோஸ்லாவியா, நேபாளம் ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாக அந்நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முதல் தடவையாக ஐரோப்பிய நாடான ரூமேனியாவுக்கு 500 மாருதி கார்கள் அடுத்த

(10ம்பக்கம் பார்க்க)

### ஆஸ்திரேலிய பத்திரிகையாளர் ஸ்தலத்தில் பலி

மணிலா, ஆக. 28

பிலிப்பைன்ஸில் திடீர்புரட்சியின்போது அதிபர் மாளிகை மீதும் தொலைக் காட்சி நிலையத்தின் மீதும் புரட்சிப் படைகள் நடத்திய தாக்குதலை முறியடிக்க அரச படைகள் பதில் தாக்குதல் நடத்திய வேளையில் ஆஸ்திரேலிய பத்திரிகையாளர் ஒருவரும் இந்த சண்டைக்குள் அகப்பட்டு பலியானார்.

திடீர் புரட்சி பற்றிய செய்தியைக்கேள்வியுற்றதும் அதிகாலை வேளையில் ஸ்தலத்திற்கு விரைந்த போதே இந்தப் பத்திரிகையாளரும் பலியானார்.

இன்று அதிகாலை ஜனாதிபதி மாளிகையையும், தொலைக்காட்சி நிலையத்தையும் சுற்றி நீண்ட துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் குண்டுவெடிப்புச் சத்தங்களும் தொடர்ச்சியாகக் கேட்டுக்கொண்டிருந்ததாக மற்றுமொரு நிருபர் தெரிவிக்கிறார்.

### முன்னாள் மே.இ காப்டன் காலமானார்

[லண்டன்]

மேற்கு இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் காப்டன் ஜோன் ஹொடாட் (வயது 68) நேற்று முன்தினம் லண்டன் தனியார் மருத்துவமனை ஒன்றில்காலமானார்.

லண்டன் போட்ஸ் மைதானத்தில் இடம் பெற்ற எம் சி சி. அணியின் 200 வது ஆண்டு விழா கிரிக்கெட் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இவர் தங்கிய விடுதியில் மயங்கி விழுந்ததையடுத்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்குமரணமானார்.

1950ம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட ஆட ஆரம்பித்த ஹொடாட் 27 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ளார். இதில்5 போட்டிகளுக்கு தலைமைவகித்தார். இடது கை துடுப்பாட்ட, வலது கை நடுத்தர வேகப் பந்துவீச்சாளர். இவர்859 ஓட்டங்களைப் பெற்றதுடன் 33விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். [ச]

**மணிவாக்கு**

வழக்கறிஞர்களையோ ஆசிரியர்களையோ 'கலைஞர்களையோ சூமாஸ்தாக்களையோ உருவாக்குவது கலவியின் நோக்கமல்ல. மனிதனை உருவாக்குவதே அதன் நோக்கம்.

— ஓர் அறிஞன்

## நமது நோக்கு

# மக்கள் விழிப்புடன் இருப்பது அவசியம்

இலங்கை இராணுவத்தின் அடாத செயல்களினால் மூடிக்கிடந்த ஏராளமான கிராமப்புறக் கோயில்களும், வணக்க ஸ்தலங்களும் மீண்டும் திறக்கப்பட்டுவருகின்றன. நிறுத்திவைக்கப்பட்டிருந்த பூசைகள், ஆராதனைகள், மற்றும் சமயக் கிரியைகள் ஆரம்பமாகியுள்ளன. ஒத்திப்போடப்பட்டிருந்த திருவிழாக்கள் ஆரம்பமாகின்றன.

நான்கு ஆண்டு காலத்துக்கு மேலாக போரின் அவதியில் அன்றாடம் இறைவனிடம் அமைதிவேண்டி முறையிட்டுவந்த மக்கள், தமது வேண்டுதல் நிறைவேறியுள்ளதை எண்ணி மகிழ்கிறார்கள்.

அதனால் முன்பைவிடத் தீவிரமாக விரதங்கள் இருந்தும், தியானங்கள் புரிந்தும் கோயில்களுக்குச் சென்று வழிபடுகின்றார்கள்.

கடந்த வாரம் நடந்து முடிந்த நல்லூர் முருகன் ஆலயத் திருவிழாவின் போது திரண்டுவந்த மக்கள் மத்தியில் இந்தவிதமான பக்திப்பிரவாகத்தைக் காணமுடிந்தது.

இப்போது ஏற்பட்டுள்ள அமைதி நிரந்தரமாகவேண்டும்என அவர்கள் தொடர்ந்தும் வேண்டுதல் செய்கிறார்கள் என்று கூறத்தேவையில்லை.

தொழில்களை இழந்துநின்றவர்கள் புதுத் தொழில்களைத் தேடுவதிலும், தொழில் நிலையங்களை இழந்தவர்கள் அவைகளைத் திருத்தி அமைப்பதிலும், இருப்பிடங்களை விட்டுச் சென்றவர்கள் அவ்விடங்களுக்குத் திரும்பிச் செல்வதிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

மூலைகளில் முடங்கிக் கிடந்த வாகனங்கள் எல்லாம் தெருக்களுக்குத் திரும்பியுள்ளன. தெருக்களில் போக்குவரத்து நெருக்கடி மோசமாகியுள்ளது. வாகன நெறிகளை எவரும் மதிப்பதில்லை. ஒரு வழிப் பாதை கடைப்பிடிக்கப்படுவதில்லை. இதனால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன. சில தினங்களுக்கு முன் ஒரு கர்ப்பிணி மாது வேகமாகவந்த மினிபஸ் ஒன்றினால் மோதப்பட்டுப் பலியானார்.

இதுமட்டுமல்ல; இவ்வளவு காலமாக ஒதுங்கியிருந்த திருடர்களும் தம் கைவரிசைகளைக் காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். கோயில் திருவிழாக்களில் கூடும் மக்களிடமிருந்து தங்க நகைகளைக் கொள்ளையிடுவதிலிருந்து தனித்துச் செல்லும் மக்களிடமும் கொள்ளையிட முனைந்திருக்கிறார்கள்.

கிராமங்களில் ஆயுதங்களுடன் சென்று வீடுகளில் உள்ளவர்களைப் பயமுறுத்திக் கொள்ளையடிக்கும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

ஒருகிராமத்தில் வீடுகளில் கொள்ளையிடுவதற்கு முன் யோசனையாக வீடுகளிலிருந்த நாய்களுக்கெல்லாம் நஞ்சு மருந்தூட்டிக் கொலை செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

மக்களின் சமூக வாழ்வில் இந்தப் போக்குகள் நிச்சயமாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

இதை யார் செய்வது?

இலங்கை இராணுவத்தின் கெடுபிடிகளும் அதன் விளைவுகளும் ஓய்ந்துபோயுள்ள நிலைமையில் இப்படியான புதிய சிக்கல்கள் தலையெடுப்பது தவிர்க்கமுடியாததுதான். ஆனால் மக்கள் விழிப்பாக இருப்பார்களானால் நிச்சயமாக இந்நிலைமையைக் கட்டுப்படுத்தமுடியும்.

சமூகத் தலைவர்கள் இது பற்றி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரலாமே!

கிராமப்புறங்களில் முன்னர்போல் மீண்டும் மக்கள் விழிப்புக் குழுக்களை ஆரம்பித்து கொள்ளைகளைத் தடுக்க முடியாதா?

சனசமூக நிலையங்கள், பிரஜைகள் குழுக்கள், கிராமாபிவிருத்திச் சங்கங்கள் போன்ற அமைப்புக்களின் தலைவர்கள் இதுவிடயமாகக் கூடி ஆலோசித்துக் காரியத்தில் ஈடுபடுவது அவசியம்.

# உரும்பராய் கருணாகரர் கொடி

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

ஆதீன முதல்வர் சிவாசாரியமணி சிவஸ்ரீ. வை. சபாரத்தினக் குருக்கள் விழாவுக்கான கிரியைகளை நடத்துவார்.

எதிர்வரும் 6ம் திகதி தேரும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

[சங்குவேலி ஸ்ரீசிவஞானப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவ கொடியேற்றம் இன்று]

## கணபதியே துணையாவாய்!

பொங்கு புகழ்ப் பதியதுவாய்ப்
பாரினிலே பெருமை மிகும்
சங்குவேலித் தலமதிலே
கோவில் கொண்ட கணபதியே!
எங்கு முயர் சிறப்புடனே
எங்கள் தமிழ் இனமென்றும்
தங்கிடவே துணையாவாய்
தொழுகின்றோம் உன்பாதம் ஐயா!

—ப. மகேந்திரதாசன்

# நான்காவது பண்பாட்டு மகாநாடு இன்று மலேஷியாவில் ஆரம்பம்

உலகமெலாம் பரந்து வாழ்ந்துவரும் தமிழின மக்களுக்காக அவர்களின் முன்னேற்ற வாழ்வில் அக்கறை கொண்டு அரும்பணி ஆற்றிவரும் தமிழ்க் கலாசார, பண்பாட்டு இயக்கமான உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் 1974ம் ஆண்டில் தைத்திங்களில் யாழ் நகரில் கோலாகலமாக நடந்தேறிய உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுவேளையில் உலகின் பல நாடுகளில் இருந்து வந்தஅறிஞர் பெருமக்களால் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பின் முன்னோடிகள்வணபிதா தனிநாயகம்அடிகளார், மலேசியா திரு. இர. ந. வீரப்பன், பேராசிரியர் சாலை இளந்திரையன், குரும்பசிட்டி திரு. இரா. கனகரத்தினம் போன்றோராவர் இந்த இயக்கம் எந்தவித அரசியல் சார்புமில்லாத தொன்றாகும். உலகில் 55 நாடுகளில் தொடர்புறவுகளையும் 40 நாடுகளில் கிளைகளையும் கொண்டு இயங்கிவரும் இந்த இயக்கம் தமிழர்கள் எங்கிருந்தாலும் அவர்தம் நல்வாழ்வியல் நலன் கருதிப் பல சாதனைகளைப் புரிந்துள்ளது

தென் ஆபிரிக்காவில் இன ஒதுக்கல் அரசால் பல ஆண்டுகளாகச் சிறைவைக்கப்பட்டுச் சிறைக்காலம் முடிவுற்றும் தொடர்ந்து விடுதலை செய்யப்படாமல் வாடிய தமிழ்த் தலைவரான திரு. வேங்கடரட்ணம் அவர்களின் விடுதலைக்காக உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளை குரல் கொடுத்ததன் பேரில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

1980 ஆம் ஆண்டில் மொறிசியசு நாட்டில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கு அந்நாட்டு அரசு பூரண ஆதரவுவழங்கியதுடன் மகா நாட்டைச் சிறப்பித்துக் கௌரவிக்கும் முகமாக 20 சதம் பெறுமதியான முத்திரையொன்றையும் வெளியிட்டது. அதில் "உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு 1980" என்ற வாசகம் பொறிக்கப்பட்டது. அந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், மற்றும் அமைச்சர்கள் எல்லோரும் இம் மாநாட்டில் கலந்து சிறப்பித்தமையும், நாட்டில் முதலாவது தமிழ் மாநாடு இது என்பதாலும் இம் மாநாடு வரலாற்றில் இடம்பெற்ற அம்சமெனலாம்.

எமது கிளையின் கோரிக்கையின் பேரில் மொறிசியசுப் பிரதமர் திரு. யாக்நோட் (யகநாத்) அவர்கள் 1983 ஆம் ஆண்டு ஆடியில் இலங்கையில் தமிழருக்கெதிராக நடாத்தப்பட்ட பாரிய அழிவுகளையும், உயிரிழப்புகளையும் உண்டு பண்ணிய கலவரத்தைச்சுட்டிக் காட்டி, ஐ. நா. சபையில் அனுதாபக் குரல் கொடுத்த நிகழ்ச்சியை நமது சமுதாயம் என்றும் மறக்க முடியாத வரலாறாகும்.

தலைவர் திரு. இ ந வீரப்பன் அவர்கள் சென்ற ஆண்டில் இந்திய நாடு முழுவதும் சுற்றுலா மேற்கொண்டு தமிழர் சமுதாய வாழ்க்கை நலன்கள், உரிமைகள் தொடர்பாக விபரங்களை அறிந்து வந்துள்ளார். பின்னர் அவர் ஆண்டின் பிற்பகுதியில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்குச் சென்று ஆங்கே வாழும் தமிழர், தமிழ் அகதிகள் தொடர்பான பல்வேறு விடயங்களை அறிந்தும் ஆய்ந்தும் அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை வெளியிட்டார்.

1982ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையில் நமது இயக்கத்துக்குப் பார்வையாளர் அந்தஸ்துக் கோரி விண்ணப்பிக்கப்பட்டது. சர்வதேசங்களில் வாழ்ந்து வரும் தமிழினத்தாரின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டு வரும் காரணங்களாலும், ஐ நா. மனித உரிமை சாசனத்தை மதித்து ஏற்றுக்கொண்டமையாலும், மனித உரிமைகளுக்காகப் போராடும் இயக்கங்களுடன் தொடர்பு வைத்து பணி செய்வதாலும், ஜெனிவாவில் உள்ள தொழிலாளர் அமைப்புக்களுடன் தொடர்புறவுகள் கொண்டு செயல்பட்டு வரும் காரணத்தாலும், இன்ன பிறவாலும் இந்த ஆண்டில் நமது அமைப்புக்கு ஐ. நா வில் பார்வையாளர் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள ஐ நா. வின் கூட்டங்களில் தலைவர் திரு வீரப்பன் அவர்களும் மொறிசியசுத் தமிழ் செல்வர் திரு. மா. தங்கணமுத்துஅவர்களும் பார்வையாளராகக் கலந்து கொள்ள வட அமெரிக்கா செல்லவிருக்கின்றனர். பாரிஸ் மாநகரில் உள்ள நமது தமிழ்த்தூதர் திரு. டி. தேவகுமாரன். (றியூனியன்) அவர்கள் தமிழ்ச் சமுதாய முன்னேற்றத்துக்கன முயற்சிகளில் மேலைத் தேசங்களில் தன்னாலியன்ற பணியைச் செய்துவருகின்றார்.

உ. த. ப இன் 4 வது மாநாடு தொடர்பான "உலகத்தமிழர் குரல்" சிறப்பு மலரான வெளியீட்டு நிகழ்ச்சி இன்று 4 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறும். இலங்கைக்கிளைத் தலைவர் திரு பொன். பூலோகசிங்கம் விழாவுக்குத் தலைமை தாங்குவார்.

ஆ. சண்முகலிங்கம்

# ஸ்ரீமகாகணபதிப் பிள்ளையார் ஆண்டு மகோற்சவம்

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீமகாகணபதிப பிள்ளையார் கோவில் [காளி கோவில்] வருடாந்தமகோற்சவம் இன்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இவ்வாலயம் யாழ்ப்பாணம் கோண்டாவில்மேற்கில்வசித்த கந்தர் என்பவருக்கே சொந்தமான வளந்தான்புலம் அல்லது கந்தர்வளவு என்னும் காணியில் இற்றைக்கு 150 வருடங்களுக்குமுன்னதாக கோண்டாவில் மேற்கு பகுதியில் வசித்த இந்துவேளாளர் குலத்தைச் சேர்ந்த பொதுமக்களால் நடராசப்பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதன் அருகே தான்தோன்றியாக வளர்ந்த காளிஅம்பாள் வீற்றிருக்கின்ற திருக்கல்லு, நடராசபிள்ளையார் பிரதிஷ்டைசெய்வதற்கு முன்னதாக இருந்து வந்திருக்கின்றது.

திருக்கல்லில் எழுந்தருளியுள்ள காளிவழிபாடு நடைபெற்றுவரும்நாட்களில் 1836ம் ஆண்டளவில் நடராசப்பிள்ளையார்பிரதிஷ்டைசெய்யப்பட்டு காளிஅம்பாளுக்கும் பிள்ளையாருக்கும் கல்லினால் உருவாக்கப்பட்ட சிறுஆலயம் அமைக்கப்பட்டது.

இவ்வாலயத்தின் வளர்ச்சிக்காக இப்பகுதியில் வாழ்ந்த நமது மூதாதையர்கள் பலர் 1950ம் ஆண்டளவில் இருந்து மும்மரமாக ஈடுபடத்தொடங்கினர். இதன்பயனாக ஆலயம் 1953ம் ஆண்டளவில் புதிதாக கட்டஆரம்பிக்கப்பட்டு 1956ம் ஆண்டுபிற்பகுதியில் கட்டிடம் முற்றாக நிறைவுபெற்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1957ம் ஆண்டு தை மாதம் கொடியேற்றவைபவம் நடைபெற்று தொடர்ந்து 10 நாட்கள் மகோற்சவமும்நடைபெற்றது. இதன்பிற்பாடு வருடாவருடம் ஆவணிமாதப்பட்சத்திற்கு சிறப்பாக மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது.

1971ல் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு முழுக்கட்டிடமும் புதிதாகக் கட்டப்பட்டு 1980ல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று புதிய சித்திரத்தேர் செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1985ம் ஆண்டு புதிய சித்திரத் தேர் பொதுமக்களின் உதவியுடன் 5 லட்சம் ரூபா செலவில் செய்யப்பட்டு வெள்ளோட்டமும் புதிய சித்திரத்தேர்உற்சவமும் நடைபெற்றது.

1984ம் ஆண்டு தொடக்கம் இலட்சார்சனை உற்சவம் வைகாசி மாத சதுர்த்தியை முடிவாகக்கொண்டு 1 நாட்கள் நடைபெற்றுவருகின்றது. இவ்வாண்டு இறுதிநாள் மகா கணபதிஹோமம் நடைபெற்றது சிறப்பு அம்சமாகும். 1983ம் ஆண்டு தொடக்கம் ஆடிப்பூர்வத் திருவிழாவும், கும்பாபிஷேகமும்நடைபெற்றுவருகின்றது அன்றுமாலை காளி அம்பாளுக்கு திருமஞ்சனநீராட்டுவிழாவும் நவசக்தி அர்சனையும் நடைபெற்றுவருகின்றது.

அடுத்தமாதம் 6ம் திகதி காலை தேர்த்திருவிழாவும், 7ம் திகதி காலைதீர்த்தோற்சவமும் நடைபெறும்.

கு சண்முகலிங்கம்
செயலாளர்,
ஆலய பரிபாலனசபை

# குரும்பசிட்டி சித்திவிநாயகர் கும்பாபிஷேகம்

(குரும்பசிட்டி)

இராணுவக் கெடுபிடியினால் வெளியேற்றப்பட்ட குரும்பசிட்டி மக்களை குடியேற்றும் முயற்சியில் புனரமைப்பு வேலைகளை துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துவரும் குரும்பசிட்டி பிரஜைகள்குழு ஆரம்ப நடவடிக்கையாகக் குரும்பசிட்டி சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தை நடாத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இவ்வாலயத்தில் இராணுவம் முகாமிட்டிருந்தது ஆலயத்துக்குள்ளேயே சமையல், சாப்பாடு உறக்கம் எல்லாம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு பிராயச்சித்தமும் கும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை மேற்படி ஆலய முகாமையாளர் திரு.இ மகேசன் மேற்கொண்டுவருகிறார். கிராமப் புனரமைப்பு ஆரம்ப வைபவத்தில் கிராம மக்களை வந்து சேரும்படி பிரஜைகள் குழு அழைப்பு விடுத்துள்ளது.

# பிரயாணிகள் வியாபாரிகள் பாதிப்பு

[நெல்லியடி]

பருத்தித்துறையிலிருந்து கப்புதூ ஊடாகச் சாவகச்சேரிக்குச் செல்லும் இ. போ. ச. பஸ் வண்டிகள் உட்பட சகல வாகனங்களும் அந்தணன்திடல் மதகு உடைக்கப்பட்டிருப்பதால் கொடிகாமம் ஊடாகவே செல்லவேண்டியுள்ளது. இதனால் பிரயாணிகள் குறிப்பாக வியாபாரிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## முதுகலைமாணிப் பட்டம் பெற்றார்



குமுளமுனையைச் சேர்ந்த தங்கராசா சிவபாலு அவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றுள்ளார். 'இலங்கைப் பாடசாலைகளில் ஆசிரியர்களைச் சேவைக்கமர்த்தல், பயிற்சியளித்தல், பரிபாலித்தல்' என்னும் பொருளில் இவர் சமர்ப்பித்த ஆய்வினை ஏற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் முதுகலைமாணிப் பட்டத்தினை வழங்கியுள்ளது.

முல்லை/மல்லாவி மகாவித்தியாலயத்தின் அதிபராகவும் யோகபுரம்கொத்தணிஅதிபராகவும்கடமையாற்றும் இவர் முல்லைத்தீவு மககவித்தியாலயம், யோகபுரம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகவும் அதிபராகவும், கடமையாற்றியு ளார்.

குமுழமுனை கனிஷ்ட வித்தியாலயம், முல்லை/ வித்தியானந்தாக் கல்லூரி, நெல்லியடி ம.ம. வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விமாணிச் சிறப்புப்பட்டம் பெற்றவர்.

சிறந்த சமூகசேவையாளரான இவர் துணுக்காய்–பாண்டியன்குளப் பகுதியின் பிரஜைகள் குழுத்தலைவராகவும் பணியாற்றிவருகின்றார்.

## தாயகம் திரும்பிய அகதிகள் உடைமைகள் அபகரிப்பு

[அலுவலகநிருபர் ஏ. வி. மாணிக்கம்)

தமிழ்நாட்டிலிருந்து யாழ். குடாநாட்டுக்கு இருபடகுகளில் திரும்பிக்கொண்டிருந்த அகதிகளின் உடைமைகளை அபகரித்த இலங்கை கடற்படையினர், அவர்கள் வந்த இருபடகுகளையும் தடுத்து வைத்து பின்னர் விடுதலை செய்தனர்.

தமிழ்நாட்டில் அகதிகளாக இருந்து இந்திய அரசு வழங்கிய நிவாரண உதவியிலிருந்து சேமித்த பணத்துக்கு வாங்கி வந்த பொருள்களையும் கைக்கடிகாரங்களையுமே இலங்கை கடற்படையினர் பறித்தெடுத்ததாக இவர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் இரு படகுகளில் 60 க்கு மேற்பட்டோர் வேதாரணியத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தனர். ஒருபடகில் 35 ஆண்களும் மற்றைய படகில் பல குடும்பத்தினரும் இருந்தனர்.

ஞாயிறு அதிகாலை 3 மணியளவில் மாதகல் கடற்கரைக்கு அண்மையில் இரு படகுகளும் வந்து கொண்டிருந்த பொழுது இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப் பீரங்கிப்படகு வெளிச்சம் காட்டி, அவ்விரு படகுகளையும் நிறுத்துமாறு எச்சரிக்கை விடுத்தது இதனை தொடர்ந்து படகு நிறுத்தப்பட்டதும் இலங்கைக் கடற்படையினர் அவ்விடத்திற்கு நெருங்கி அகதிகளை சோதனையிடப் போவதாக கூறி அவர்கள்வசமிருந்த பெறுமதிமிக்க உடைமைகளைப் பறிமுதல்செய்துவிட்டு, வந்த இருபடகுகளிலேயே மீண்டும் அவர்களை ஏற்றி காங்கேசன்துறை ஹாபர்வியூஹோட்டல் முகாமுக்கு அழைத்து வந்தனராம்.

இதைத்தொடந்து இந்திய அமைதிகாக்கும் படையினரின் தலையீட்டையடுத்து அனைவரும் விடுதலை செய்யப்பட்டு தத்தமது இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்றுதெரிவிக்கப்பட்டது.

## சங்காபிஷேகமும் அன்னதானமும்

(காரைநகர்)

எதிர்வரும் ஆவணி ஞாயிற்றுக்கிழமை 30ம் திகதி காலை எட்டரை மணியிலிருந்து ஈழத்துச்சிதம்பர ஆதி மூர்த்தியாகிய ஆண்டிகேணி ஐயனாருக்குச் சங்காபிஷேகமும் சௌதராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு விசேட அபிசேக ஆராதனைகளும்மக்களின் எதிர்கால பாதுகாப்பை குறித்து நடைபெறும். நண்பகலில் மாணிக்கவாசகர் மடாலயத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

## கிழக்கு லண்டன் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் மறைவு



கிழக்கு லண்டன் தமிழ் சங்கத்தின் தலைவரும், இலண்டன் ஈஸ்காம் முருகன் கோவில் அறங்காலரும், முன்னை நாள் சிங்கப்பூர் காளி அம்மன் கோவில தொண்டரும் சிறந்த சமய சமூக அபிமானியும் யாழ்ப்பாணம் வடமராட்சியைப்பிறப்பிடமாகக்கொண்டவருமாகிய பேரன்பர் திரு தம்பிராசா அவர்கள் தமது இல்லத்தில் 4-8-87ம் திகதி செவ்வாய்க்கிழமை மாரடைப்புக் காரணமாக சிவபதம் அடைந்து விட்டார் என்ற செய்தி பெரும் அதிர்ச்சியைத் தந்தது. முதன் நாள் மாலையும ஆலயம் சென்று தமது கடமைகளை நிறைவேற்றி விட்டு இல்லம் திரும்பியவர், திடீரென மறைந்துவிட்டார் என்ற செய்தி இலண்டன் வாழ் இந்திய, மலேசியா, மொறிஸியஸ், தென் ஆபிரிக்கா, சிங்கப்பூர், இலங்கை, குஜாரத்தி பஞ்சாபி ஆகிய இனத்தவர்களுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. அவர்கள் அன்னாருக்குச் செலுத்திய அநுதாபங்களும், அஞ்சலிகளும் குவிந்த வண்ணம் இருந்தன.

அமரரான திரு. தம்பிராசா அவர்களும், அவர்கள் குடும்பமும் கோயிற்பணிகளுக்கென முருகப்பெருமானால் அனுப்பப்பட்ட குடும்பமென்பது எல்லோருடைய அபிப்பிராயமாகும். அண்மைக் காலத்தில் எனது இலண்டன் பயணத்திலேயும் இவரது பேராதரவு நிரம்பக்கிடைத்தது. இலங்கை வாழ் தமிழ்மக்களின் அமைதிக்காகவும், சுபீட்சத்திற்காகவும் விசேட பிரார்த்தனைகளை ஈஸ்ற்காம் முருகன் கோவிலில் இவர்கள் நடாத்தியதை நான் நேரில் கண்டேன் இவருடைய ஆத்மா முருகன் திருவடிகளை அடைந்து நித்தியானந்தம் பெற இலங்கை வாழ் சைவத் தமிழ் மக்களின் சார்பாக பிரார்த்திக்கின்றேன்.

செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி

## நிறைகுறைந்த பாண் விற்பனை வர்த்தக ஆணையாளர் எச்சரிக்கை

[பருத்தித்துறை]

நிறை குறைவான பாண் விற்பனையால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிப்படைந்து வருவதாக யாழ் உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்திற்குப் பாவனையாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

பாவனையாளர்களின் இம் முறைப்பாட்டையடுத்து நிறை குறைவான பாண் விற்பனையை மேற்கொள்ளும் வர்த்தகர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ்ப்பாண உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் திரு. த. மார்க்கண்டு எச்சரித்துள்ளார்.

450 கிராம் பாண் 3 ரூபா 10 சதத்திற்கு விற்பனை செய்யப்படவேண்டும். இதனைக் கருத்திற் கொண்டு வர்த்தகர்கள் செயற்பட வேண்டும். இவ்வாறு விற்பனை செய்வதில் ஏதும் பிரச்னைகள் இருக்கும் வர்த்தகர்கள், வியாபாரிகள் பேக்கரி உரிமையாளர்கள் யாழ் உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளலாமென அறிவிக்கப் பட்டுள்ளது.

## இன்றைய பலன்

திகதி; 13 [29 - 08 - 87]
மாதம்: ஆவணி
கிழமை: சனிக்கிழமை
நட்சத்திரம்; சித்திரை
திதி: பஞ்சமி

மேடம்: இரக்க சிந்தை மேலிடும். செய் தொழிலில் நன்மை கிட்டும் இதயத்திலும் இன்பம் பொங்கும்

இடபம்: எதிலும் நிச்சய மற்ற நிலைமை தென்படும். வீண் செலவுகளும் இடம் பெறும். நீண்டநாள் உறவில் இன்று முறிவு ஏற்படும்.

மிதுனம்: இனிக்கப் பேசுவோர் விடயத்தில் அவதானம் செலுத்தவும். அன்னியர் உதவியுண்டு. நீண்டநாள் கனவு இன்று நனவாகும்.

கடகம்: திறமையில் முதலிடம் பெறுவர். தொழில் முன்னேற்றமுண்டு. குடும்பத்திலும் பிணைப்புகள் இறுகும்.

சிங்கம்: சகோதர வழிச்சந்தோசம் உத்தியோக உயர்வுமுண்டாம் தொடர்புகளிலும் திருப்திகாண்பீர்கள்.

கன்னி: வேண்டாத விளைவுகள் உருவாகும் வாகனம் செலுத்துவோர் அவதானம் வேண்டும். கடன் படவும் நேரிடும்

துலாம்: வாழ்வில் பிரிவுத் துயர் வாட்டும் கடமையிலும் கண்ணியம் தவறும் நண்பர்களும் காலைவாரி விடக்கூடும்.

விருச்சிகம்: குடும்பத்திலும் ஒளிவீசும் புதிய தொழில் முறையை மனம் நாடும் கல்வி மேன்பாடுமுண்டாம்.

தனுசு: வீண்விவாதங்கள் ஏற்படும் உள்வீட்டிலேயே பூசல்கள் தோன்றும் கடமையிலும் சோர்வு தென்படும்.

மகரம்: வாகன நலனுமுண்டாம் வரவிலும் திருப்தியுண்டாம் பொருளாதார விருத்தியுண்டாம்.

கும்பம்: பரம் பொருளின் அருளும் கிட்டும் பணவரவும் உண்டாம் இல்லம் இன்று பல்கலைக்கழகமாகும்.

மீனம்; அன்னியர் சவாசம் ஆபத்தைஏற்படுத்தும் கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும் சிந்தித்துச் செயல் படவும்.

திருமலை
வே. இரவீந்திரன்

## தொல்புரத்தில் 'உதய சூரியன்'

[பண்டததரிப்பு]

தொல்புரம் வழங்கம்பரை அம்மன் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள சுவர்களில் "உதய சூரியன்" சின்னம் வரையப்பட்டு கூட்டணிக்கு ஆதரவான சுலோகங்களும் எழுதப்பட்டுள்ளன.


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

**A THANKS GIVING MEMORIAL SERVICE**

for the life of

REV. DR. MAX HUNTER HARRISON

(Former missionary and acting Principal of Jaffna College and Principal of the United Theological College, Bangalore)

will be held at

The Cathedral Church, Vaddukoddai.

at 8.30 a.m. on Saturday 5th September, 1987.

The presence of alumni and friends will be greatly appreciated

A. KADIRGAMAR.
Principal.

Jaffna College,
Vaddukoddai.

[A 2075]

**BECON,** 156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

**A/L 88 Day Class**

கலை, வர்த்தகம்.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| வர்த்தகம் | — | ரட்ணம் |
| அளவையியல் | — | S S. மனோகரன் |
| கணக்கியல் | — | மரியதாஸ் |
| இந்துநாகரிகம் | — | அருள்நங்கை |
| தமிழ் | — | மீரா |

**ஆரம்பம்: 31–08–87**

திங்கள் காலை 7-00 மணி

(எ-2112)

யாழ்ப்பாண அக்கடமி
க பொ. த. உயர்தர பரீட்சை
ஆகஸ்ட் 1988 மீட்டல் உயிரியல்

**பௌதிகவியல் வகுப்புக்கள்**

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒரு முறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப் படும்.

சேரவிரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும். வகுப்புக்கள் 9-9-87 ஆரம்பமாகின்றன.

அதிபர்.

376, பிரதான வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 22617

[எ 2071]

**தேவை**

யாழ்.நகரில் கஸ்தூரியார் வீதி, கோண்டாவில் K. K S. வீதி கிளைகளைக்கொண்ட பிரபல தையல் நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) காசாளராகவும் கடமையாற்றக்கூடிய பெண் கணக்கு லிகிதர்

கல்வித்தகைமை: க. பொ. த உயர்தரவகுப்பில் கணக்கியல் பாடத்தில்சித்தியுடன் ஆங்கில அறிவும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(2) விற்பனைப்பிரதிநிதி: வியாபார அனுபவமுள்ள ஆண், பிணைப்பணம் செலுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

(3) பெண் தையலாளர்: சிறுவர்களுக்கான சோட்ஸ், சேட் பெண்களுக்கான சகலவிதமான உடைகள் தைப்பதில் அனுபவம் உள்ளவர்கள் நற்சான்றிதழுடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்களை 7-9-87க்குமுன் அனுப்பிவைக்கவும்.

விபரங்களுக்கு விளம்பர இல. C 0681 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம்

[எ 0681]

# இந்தியதேசிய நலன்கருதியே சமாதான ஒப்பந்தம்

## விரிவுரையாளர் சிவராசா கருத்து

(அலுவலக நிருபர்)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பான இந்தியஇலங்கை ஒப்பந்தம் இலங்கைத் தமிழ் மக்களின் நன்மைகருதிச் செய்யப்படவில்லை. இந்திய தேசிய நலன்களை முதன்மைப்படுத்தி அவற்றை கட்டிக் காக்குமுகமாகச் செய்யப்பட்டதாகும்.

பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. அம்பலவாணர் சிவராஜா, "இந்திய இலங்கை இணக்கம் புறநிலைப் பரிமாணம்" என்ற பொருள் பற்றி உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற இந்நிகழ்ச்சியை யாழ் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றம் ஒழுங்கு செய்திருந்தது.

திரு. சிவராஜா மேலும் உரைநிகழ்த்துகையில் தெரிவித்துள்ளதாவது;

"இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு கேரளா, ஹரியானு மாநிலங்களில் நடைபெற்ற தேர்தலில் ஏற்பட்ட தோல்விகளினுலும் வெளிநாட்டு ஆயுதக கொள்வனவு சம்பந்தமாக இடம்பெற்ற ஊழல் பிரச்னைகளினுலும் இந்திய அரசின் செல்வாக்கு உள்நாட்டில் சரிந்துகொண்டுசெல்லும் நிலையை சரிப்படுத்தி வெளிநாடுகளில் தாது செல்வாக்கை மீண்டும் நிலைநிறுத்த வேண்டியதேவை திரு ராஜீவ்காந்திகு ஏற்பட்டது.

அதேசமயம் இலங்கையின் வடக்கு கிழக்கில் போராளிகள் பிரச்னை தெற்கில்மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணியால் பிரச்னை.

தெற்கிலுள்ள ஜே. வி பியின பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமாயிருந்தால் முதலில் வடக்கு கிழக்கு பிரச்னைகளைத் தீர்க்கவேண்டும் என்று ஜே. ஆர். விரும்பினுர். இச்சமயத்தில் திரு. ராஜீவ்காந்தி இலங்கை இனப்பிரச்னையில் தலையிட்டு தனது ஆளுமையை வெளிக்காட்டவும் அதனை ஒரு வெற்றிவிழாவாக தமிழ் மாநிலத்தில் கொண்டாடவும் விரும்பினுர். அதற்காகஇலங்கைத் தமிழ்மக்களின் நலனைப் புறக்கணித்து ஜே. ஆருடன் இந்ந ஒப்பந்தத்தை ராஜீவ் செய்துகொண்டார்.

வடச்கு-கிழக்கில் போராளிகள் பிரச்னை, தெற்கில் ஜே. வி. பி பிரச்னை, உள்நாட்டில் முக்கிய உணவுப்பொருள்களான அரிசி, மீன் உற்பத்தியில் வீழ்ச்சி, வெளிநாட்டு வருவாயில் வீழ்ச்சி, நிதிஉதவி பெறமுடியாதநிலை இவைகளால் இலங்கைஅரசுக்கு ஏற்பட்ட தாக்கமும் இந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசுசெய்து கொள்ள முக்கிய காரணிகளாகும்.

### ஜே. ஆரின் இந்திய எதிர்ப்புப் போக்கு

மேலைத்தேய சார்புக்கொள்கையை மேற்கொண்டிருந்த ஜனுதிபதி திரு.ஜெயவர்த்தனு இந்திய விரோதப் போக்கையும் கடைப்பிடித்து வந்தார். ஆனுல் இந்திய விரோதப் போக்கை நீண்ட காலத்துக்கு கடைப்பிடிப்பது என்பது தெற்காசியப் பிராந்தியத்திலுள்ள புவிசார் அரசியல் சூழ்நிலையில் சாத்தியமற்றதாகும் மறுபக்கத்தில் வடக்கு கிழக்கில் தமிழ் போராளிக் குழுக்களுடன் ஒரு யுத்தம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்த ஜனுதிபதி ஜே. ஆர். தென்னிலங்கையில் மக்கள் விடுதலை முன்னணியின் ஆயுத நடவடிக்கைளையும் ஏககாலத்தில் எதிர்நோக்குவது என்பது இலகுவாக அமையவில்லை. இதனுல் தனது முழு சக்தியையும் தென்னிலங்கையில் பிரயோகிக்கவும் தனது ஆட்சியைக் காப்பாற்றவும் ஏதோ ஒரு வகையில் சிலவற்றை விட்டுக் கொடுத்து பிரச்னைக்குத் தீர்வு காண விரும்பினுர். இதனுல் உருவானதே இந்த ஒப்பந்தம்.

---

## மீண்டும் தலைவர்

[அச்சுவேலி]

அச்சுவேலி லயன்ஸ் கழகத்தின் தலைவராக மீண்டும் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

செயலாளராக திரு. வி. சுவாமிநாதனும் பொருளாளராக திரு. எஸ். சண்முகநாதனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

---

## அத்தியாயுர் அருணுசலம் 100—வது ஜனனதினம்

"அன்னசத்திரம் ஆயிரம் கட்டல் ஆலயம் பதினுயிரம் நாட்டல் முன்ன யாவிலும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'.

என்ற பாரதியாரின் கவி வரிகளிற்கு இலக்கணமாக வாழ்ந்து கல்வித்தொண்டு புரிந்தவர்தான் அமரர் அத்தியார் அருணுசலம் அவர்கள்.

இவர் கல்வித் தொண்டுடன் அமையாது பல பமூகத் தொண்டுகளையும் புரிந்துள்ளார்.

நீர்வேலி கிராமசபைத் தலைவராக இருந்த காலத்தில் மணல்மேடாகக் காட்சியளித்த ஒழுங்கைகளையெல்லாம் தார் போட்ட வீதிகளாக மாற்றியுள்ளார். அரசாங்கத்தார் வழங்கிய உதவிகள் அனைத்தும் சாதாரண ஏழை மக்களிற்குக் கிடைக்கச் செய்வதற்கு அரும்பாடுபட்டுள்ளார்.

நீர்வேலி கிராம முன்னேற்றச் சங்கத்தலைவராக இருந்த காலத்தில் தனது பங்களிப்பை முழுமையாக இக்கிராமத்திற்கு வழங்கியுள்ளார் என்பதற்கு சிகரெட் புகையிலைச் சங்கம், கூட்டுறவுச் சங்கம் என்பவற்றின் செயற்பாடுகள் இன்றும் சான்று பகர்கின்றன. சமயத்துறையிலும் கூட இவர் தனது பங்களிப்பை வழங்கத் தவறவில்லை.

இவரின் சேவையை அறிந்த அரசினர் இவருக்கு "முகாந்திரம்" "முதலியார்" சமாதான நீதிபதி' ஆகிய பட்டங்களை வழங்கி இவரைக்கௌரவித்தனர்.

தனது உழைப்பினுல் கிடைத்த ஊதியத்தைச் சிறிது சிறிதாகச் சேமித்து அக்காலத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையாகத்திகழ்ந்த சிறு தமிழ்பாடசாலையை விலைக்கு வாங்கினுர்

இப்பாடசாலையை நன்குவிஸ்தரித்து பிரமாண்டமான அரங்குகளையுடைய கல்லூரியாகக் கட்டிஅதற்குஅத்தியார்இந்துக் கல்லூரி' என்னும்பெயர் சூட்டினுர்.

இக்கல்லூரிஇன்றுவலிகாமம் கிழக்கிலே ஒருபெரிய கல்லூரியாக திகழ்கிறது. சுமார் 1,500 மாணவர்கள் இக்கல்லூரியில் கல்விகற்கிறுர்கள். வலிகாமம் கிழக்குப்பகுதி மாணவர்களின் அறிவுப் பசியை தீர்க்கும் நிலையமாக இக்கல்லூரி விளங்குகிறது என்றுல் அதற்குக் காரணம் இவரின்பெரு நோக்கும் பரந்துபட்ட சிந்தனையுமேயாகும்.

இவ்வாறு பல்வேறுதுறைகளிலும் தமது பங்களிப்புகளை நல்கியஅத்தியார் அவர்கள் 1961ம் ஆண்டு பரட்டாதி மாதம் 22ம் திகதி தமது பூதவுடலை நீக்கி புகழிடம்பெய்தினுர். அன்னுரது நூறுவது நினைவுதினம் அண்மையில் கொண்டாடப்பட்டது.

நீர்வை தியாகு-கணேஸ்.

---

## பிறந்தநாள் வாழ்த்து



செல்வி நிரஞ்ஷலா 29-08-84

செல்வன் ரமேஸ்காந் 22-08-85

மண்கும்பான் மேற்கைச் சேர்ந்த யோகநாதன் கனகேஸ்வரி தம்பதிகளின் அன்புச்செல்வி நிரஞ்ஷலா தனது மூன்ருவது பிறந்த நாளையும், அருமைச் செல்வன் ரமேஸ்காந் தனது இரண்டாவது பிறந்த நாளையும் இன்று 29-08-87ல் தமது இல்லத்தில் மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகிறுர்கள்.

இவர்கள் இருவரையும் அப்பா, அம்மா, அப்பம்மா, ஐயா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி, மாமாமார், அத்தைமார், அண்ணன்மார், அக்கா தங்கை மச்சான்மார், மச்சகள் மார்இந்தியாவில் இருக்கும் அரசு மாமா,மயில்மாமா. பிரான்சில்இருக்கும் சித்தப்பா, அன்ரி, தம்பி கோசிலன் மற்றும் உற்றுர், உறவினர்கள் யாவரும் இறைவன் அருள் பெற்று பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றுர்கள். சி-0688

---

(இன்று கொடியேற்றம்)

## மஞ்சவனப்பதி மாமுருகா!

கொக்குவில் சேர் மஞ்ச வனப்பதிக் கோவிலின் கண்
ஒக்கவிருந் தாட்சிசெயும் ஒண்முருகா!—
தொக்கவெங்கள்
மக்களிப் போகொஞ்சம் வாதையின்றி வாழ்கினம்; நீ
தக்கவருள் இன்னமுமே தா.

★ ★ ★

மஞ்ச வனப்பதி மாமுருகா!
தஞ்ச மெமக்கினி நீ முருகா!
வஞ்ச மனத்தவர் தம்செயலால்
துஞ்ச விடாதினி நீயருள்வாய்!

---

## பொன்னுலை வரதராஜப் பெருமாளே!

பொன்னு லைவரத ராஜப் பெருமாளே!
உன்னுலை ஆகாத தொன்றுமில்லை— உன்னுணை
என்னுலை ஆவதுமோ ஒன்றுமில்லை; ஐயா! என்
முன்னுலை வந்தருளை மூட்டு.

★ ★ ★

வரதரா ஜப்பெருமாள் வள்ளலே! நின்முன்யான்
வரவருளைத் தாநீல வண்ணு!—அரனின்
அடியையன்று தேடினுய்; இன்றடியேன் நின்றுன்
அடியையே தேடுகின்றேன்; ஆள்.

★ ★ ★

ராஜப் பெருமாளே! இங்கெமது வாழ்வினையே
நாசப் படுத்திவிட்டான் நன்முடவன்—சேசவனே]
அன்றுதொட்டு வாட்டமுற்று இன்னலுறு
மென்றனது
துன்று பிணியைத் துரத்து.

★ ★ ★

பெருமாளே! இன்றிந்தப் பேதைபடும் பாடு
பெரும்பாடு இங்கிந்தப் பூவில்—பெருமரவில்
பள்ளிகொள் ளும்மாலே! பாவகியின் மாதுவனே!!
துள்ளிவரும் கோள் வலியைக் கொல்.

—கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

---

## வருடாந்த உற்சவம்

[யாழ்ப்பாணம்]

சங்குவேலி ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெற்று செப்டம்பர் 6ம் திகதி ரதோற்சவமும் 7ம்திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

---

## இவ்வாரம் 300 இளைஞர்கள் விடுவிக்கப்படுவர்

(கொழும்பு)

காலிபூஸா முகாமிலிருந்து மேலும் முந்நூறு தமிழ் இளைஞர்கன் இவ்வாரம் விடுவிக்கப்படுவார்களெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் சுமார் 1,400 தமிழ் இளைஞர்கள் தென் பகுதி தடுப்பு முகாம்களிலி

(9ம் பக்கம் பார்க்க)

---


## பண்டித வகுப்புக்கள்

[யாழ்ப்பாணம்]

வண்ணுர்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றுவந்த இலவச பிரவேச பாலபண்டித வகுப்புக்கள் வன்செயல்கள் காரணமாகத்தடைபட்டிருந்தன. கல்விப்பணிப் பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூரின் முயற்சியினுல் மீண்டும் இவ் வகுப்புக்கள் 30ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகினறன.

---

## 3—வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி அழகம்மா முருகுப்பிள்ளை

தோற்றம்: 31-07-1921
மறைவு: 31-08-1984
திதி: 29-08-19'7

அன்புத்தெய்வமே தூண்டாமணி விளக்கே நீர் எங்களை விட்டுப்பிரிந்து மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்தன. மூவாயிரம் ஆண்டுகள் சென்றுலும் உமது நினைவுகள் எங்கள் மனதைவிட்டு அகலா உமது ஆத்மாசாந்தியடைய இறைவனை இடைவிடாது பிரார்த்திக்கின்றோம்.

அன்புக்கணவன்,அருமைப் பிள்ளைகள். மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நந்தாவில்,
கொக்குவில்.

சி-0646

---


## இடமாற்றம்

கொழும்பு ஸ்ருடியோ ஸ்ரான்லி வீதி

20-08-87 முதல்

[வெலிங்டன் சந்திக்கு வடக்கே] 55, மணிக் கூட்டு வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. ஏ-2086

# இந்திய படைத்தளபதி ஈழ.தே. ஜ. வி. மு. சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழ தேசிய ஜன நாயக விடுதலை முன்னணிப் பிரமுகர்கள் இந்திய அமைதிப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹார்கீர்த் சிங்கை பலாலி இராணுவ முகாமில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்திய அமைதிப்படைத் தளபதி மேஜர் ஜெனரலுடனை இச்சந்திப்பில் ஈ. என் டி. எல் எவ். சார்பில் திரு. ராஜன், மு. கனகராசன், நாதன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

யாழ் குடா நாட்டில் இன்னமும் அகற்றப்படாமல் இருக்கும் சிறிலங்கா இராணுவ முகாம்களை அகற்றுமாறும், இன்னமும் விடுதலை செய்யப்படாத போராளிகளை உடனடியாக விடுவிக்குமாறும், மீளளிக்கப்படாமல் இருக்கும் தனியார் சொத்துக்களை மீளவும் உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறும், மக்களுக்கு இருக்கும் பாதுகாப்பைப்போல், பிற இயக்கங்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறும் இச் சந்திப்பின்போது இந்திய அமைதிப்படைத்தளபதியிடம் வலியுறுத்திக் கூறப்பட்டதாகத் தெரியவருகிறது. (வா)

## புலிக்கொடியை இராணுவம் அறுத்தெடுத்தது

(வல்வெட்டித்துறை)

தொண்டமனாறு சந்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஏற்றித் தொங்கவிடப்பட்ட புலிக்கொடியை தொண்டமானாறு முகாமிலிருக்கும் இராணுவத்தினர் இறக்கியதுடன் அப்பகுதியில் ஒட்டப்பட்டிருந்த வீரமரணமடைந்த வீரவேங்கைகளின் அஞ்சலி சுவரொட்டிகளையும் கிழித்தெறிந்தனர்.

இதனால் அங்குள்ள இராணுவத்தினர் மீது புலிகளுக்கு கடுஞ்சினம் ஏற்பட்டுள்ளது.

## நினைவுப் பேருரைகள்

[யாழ்ப்பாணம்]

சேர்.பொன்னம்பலம்இராமநாதன் நினைவுப்பேருரை நாளை ஞாயிற்றுக்கிழமையும், லீலாவதி இராமநாதன்பெருமாட்டி நினைவுப்பேருரை 31ம் திகதி திங்கட்கிழமையும் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளன.

சேர்.பொன்னம்பலம்இராமநாதனின் நினைவுப்பேருரையை யாழ்பல்கலைக்கழகவரலாற்றுத் துறைப் பேராசிரியர் எஸ். பத்மநாதனும், லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரையை யாழ் பல்கலைக்கழக கல்வித் துறைப்பேராசிரியர் ப. சந்திரசேகராவும் நிகழ்த்தவுள்ளார்கள்.

இவ்விரு நினைவுப்பேருரைகளும் பிற்பகல் 3 மணிக்குநடைபெறுமென உபவேந்தர் சு. வித்தியானந்தன் தெரிவித்தார். [வா]

## பத்தைமேனிவிபரம் திரட்டப்படுகின்றது

[அச்சுவேலி]

பத்தைமேனி-இடைக்காடு பிரஜைகள்குழு இப்பகுதியில் இராணுவநடவடிக்கைகளினால் ஏற்பட்டசேதங்கள், பாதிப்புக்கள் பற்றிய பூரண விபரங்களை பிரத்தியேகமான படிவத்தின் மூலம் திரட்டுகின்றது.

பிரஜைகள் குழுவினால் அச்சிடப்பட்ட இந்த விஷேட படிவம் ஒவ்வொருகுடியிருப்பாளர் வீடுகளுக்கும் விநியோகிக்கப்பட்டு தகவல் சேகரிக்கும் தொண்டர்கள் மூலம் விபரங்கள் திரட்டப்படுகின்றன.

## நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்தில் தலைவராக மு. சரவணமுத்துவும், செயலாளராக நா. சொக்கலிங்கமும், பொருளாளராக மா. சந்திராதித்தரும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# "இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் ஈழவிடுதலைப் போராட்டத்தின் வரலாற்றை மாற்றிவிட்டது

## சிவகுமாரன் நினைவு விழாவில் திலீபன்

(என். கே. துரைசிங்கம்)

"நாம் சென்ற பாதையில் இப்பொழுது சந்தியில் நிற்கின்றோமே தவிர எமது பயணம் முடிந்துவிடவில்லை போர் இன்னமும் ஓய்துவிடவில்லை' என்று கவிஞர் காசி ஆனந்தன் தெரிவித்தார்.

உரும்பிராய் சந்தியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தியாகி சிவகுமாரன் நினைவு தினக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

திரு. முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கவிஞர் காசி ஆனந்தன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இந்திய இலங்கை ஒப்பந்தம் மூலம் இந்தியா வெற்றி பெற்றுள்ளது. இந்தியா தனது நலனைக் காத்துக் கொள்வதற்காகவா எமது மக்கள் மரணமானூர்கள்.

### ஒடுக்குபவர்களுக்கு இந்தியா துணை போகிறது

ஒடுக்கப்பட்டவர்களுக்கு துணையாக நிற்பேன் என்று கூறிவந்த இந்திய அரசு இன்று ஒடுக்குபவர்களுக்கு துணை போகிறது.

எமது போராட்டத்தினால் வெற்றி பெற்றுள்ள இந்தியா எமது மண்ணிலிருந்து வாபஸ் பெறும்போது நாம் வெற்றி பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

பிரபாகரனில் சிவகுமாரனைக் காண்கின்றேன். தியாகி சிவகுமாரனின் நேர்மை ஒழுக்கம், வீரம். தியாகம் விடுதலை உணர்வை பிரபாவிடம் காண்கின்றேன்.

தலைவர் பிரபாகரனின் கீழ் தமிழர் விடுதலைக் கூட்டணியை சேர்க்குமாறு திரு. அமிர்தலிங்கத்தை கேட்கின்றேன், கூட்டணி புலிகளின் கீழ் வந்தால் ஏனைய சிறு இயக்கங்களும் விடுதலைப் புலிகள் தலைமையின்கீழ் இயங்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் திலீபன் பேசுகையில் கூறியதாவது:

எத்தனையோ வெற்றிப் படிகளைத் தாண்டிவந்த நாம் இறுதியாக எமது மண்ணிலிருந்து சிறிலங்கா ராணுவ முகாம்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தோம்.

இதற்காக விமான எதிர்ப்பு ஏவுகணை உட்பட பல நவீனரக ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தோம். இந்த ஆயுதங்களை எம்மால் பெறமுடியாமல் போய்விட்டது.

மேற்குறிப்பிட்ட ஆயுதங்களின் கொள்வனவில் ஏற்பட்ட தடைகள் காரணமாகத்தான் எமது கட்டுப்பாட்டிலிருந்த மன்னார் வவனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருமலை, வடமராட்சி ஆகிய பகுதிகளை இழக்க வேண்டி ஏற்பட்டது.

### கரும்புலிகள் அமைப்பு

இதனைத் தொடர்ந்து புதிய போராட்டத்தை ஆரம்பித்தோம். புலிகளின் தற்கொலை படையாக கரும்புலிகளின் படையை ஆரம்பித்தோம். இதில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் போட்டி போட்டுக் கொண்டு சேர்ந்தார்கள்.

மிகத் தெளிவோடும், ஆழ்ந்த அறிவோடும் போராட்டத்தை தொடங்கிய நாம் இன்றும் இவ்வாறே நடத்திக் கொண்டிருக்கிறோம்.

வாழவேண்டும், வாழுவோம் என்ற நம்பிக்கை புலிகளுக்கு இல்லை, அதேபோல் ஆழவேண்டும் என்றும் நாம் ஆயுதம் தூக்கவில்லை.

பறிக்கப்பட்ட எமது மக்களின் உரிமையை வென்றெடுக்கவும் மக்களை பாதுகாக்கவும்தான் நாம் போராட்டம் நடத்தினோம், இன்றுவரை இந்த புனித பணியில் அறுநூற்றி முப்பத்தொரு புலிகளை இழந்துவிட்டோம்.

### எம். ஜி. ஆரின் நன்கொடை

தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். வழங்கிய நான்குகோடி ரூபாவும் தமிழ்மக்கள் வழங்கிய நூற்றி அறுபது கிலோ தங்கமும் கொண்டு நாம்பல நவீனரக ஆயுதங்களை கொள்வனவு செய்தோம்.

ஆயுத ரீதியான எமதுவளர்ச்சிகண்டு பொறுக்கமுடியாத சில உளவாளி ஸ்தாபனங்களும், எம்மோடு தோளோடு தோள்நின்று போராடிய விடுதலை அமைப்புகளும் எமக்கு எதிராக பயன்படுத்தப்பட்டன.

இதனை இனங்கண்டு தக்க நேரத்தில் கட்டுப்படுத்தி ஒழுங்கான பாதையில் விடுதலை போரை முன்னெடுத்தோம்.

இராணுவ அடக்கு முறை தான் எமது பிரச்னை என்று எல்லோரும் கருதுகிறார்கள் ஆனால் இதனை விட சமூக, அரசியல் ரீதியான பல பிரச்னைகள் எமக்கு இருக்கிறது என்பதனை நாங்கள் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளவேண்டும்.

### வரலாற்றை மாற்றிவிட்டது

இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றை மாற்றியுள்ளது.

கடந்த நான்கு வருடங்களாக இடம்பெற்ற போரில் இறந்த பொதுமக்களினதும்.

(9ம் பக்கம் பார்க்க)


# NEW MASTER INSTITUTE

B. M. C. Lane, Jaffna,
241, Navalar Road, Jaffna.

## 88 A/L DAY CLASS

பிரிவு: I ஆரம்பம்:- 01-09-1987
செவ்வாய் காலை 8.30 மணி

எமது வழமையான ஆசிரியர்குழு:

| | |
|---|---|
| Physics | – திரு. சத்தியசீலன் |
| Chemistry | – திரு. மக்ஷி |
| Botany | – திரு. செல்வநேசன் |
| Zoology | – திரு. நாகநாதன் |
| Pure & Applied Maths | – திரு. A. பத்மநாதன் |

8 30 – 9.30 - Physics
9.30 – 10.30 - Chemistry
10.30 – 11.30 - Zoology
11.30 – 12.30 - Botany
10.30 – 11.30 :
11.30 – 12.30 : PURE & APPLIED MATHS

பிரிவு; II ஆரம்பம்:
19-09-87 காலை 8.30 மணி

## 88, 89 A/L WEEKEND CLASS நடைபெறுகின்றன.

எமது வழமையான ஆசிரியர் குழு

| | |
|---|---|
| Physics | - திரு. வர்ணம் |
| Chemistry | - திரு. தில்லைநாதன் |
| Botany | - திரு. குகாதரன் |
| Zoology | - திரு. நாகநாதன் |
| PURE APPLIED MATHS | - திரு. நல்லையா |

### 88 A/L

7.30- 8.30 - Physics வெப்பவியல்
8.30- 9.30 - Botany - நுண்ணங்கி உலகம்
9.30-11 30 - Zoology - நரம்புத்தொகுதி
11 30-12 30-Chemistry-சேதனஇரசாயனம்
12 30- 1 30-Physics - வெப்பவியல்
1 30-2 30-B tany - தாழ்வகைத்தாவரம்
2 30-4 30-Zoology - முளையவியல்
9.30-11.30 - Pure & Applied Maths

### 89 A/L

7.30- 9.30 - Zoology - தொகுதிகள்
9.30-10 30 - Botany–
10.30-11.30 - Chemistry - பொது இரசாயனம்
11.30-1230 - Physics - ஒளியியல்
12.30-1 30 - Botany - உருவவியல்
1.30-2 30 - Zoology - தொகுதிகள்
1.00-3.00 - Pure & Applied Maths

[எ 2115]

## பிரியாவிடை

(நெல்லியடி)

உரோமாபுரிக்குச் செல்லவிருக்கும் கரவெட்டி பங்குத் தந்தை வண. எச். சகாயநாயகம் அடிகளாருக்கும், சில்லாலை பங்குத் தந்தை வண. பொனிபஸ் அடிகளாருக்கும் யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்க வடமராட்சிக் கிளை நேற்று முன்தினம் வதிரி திருஇருதயக் கல்லூரி மண்டபத்தில் பிரியாவிடை வைபவம் ஒன்றை நடாத்தியது.

கிளைத் தலைவர் திரு. ஈ. யோசுவா தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் திருவாளர்கள் அந்தோனிமுத்து. சேவியர், திருமதிகள் இராசதுரை, மரியாபபிள்ளை, ஜெயதம்பி ஆகியோர் பாராட்டுரைவழங்கினர்.

## கால் நடை வளர்ப்போர்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண கால் நடை வளர்ப்போருக்கு உதவியளிக்குமவகையில மீண்டும் செயற்கைச் சினைப்படுத்தும் சேவை ஆரம்பிககப்படவிருக்கிறது.

பேராதனையிலிருந்து இதற்கென, அரச திணைககள வாகனங்களில காளைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த இச்சேவை, அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. கால்நடை அபிவிருத்தி திணைக்களத்தினல் திருநெல்வேலி செயற்கைச் சினைப்படுத்தும் நிலையத்தில் இச்சேவை ஆரம்பிக்கப்படும்.

## பாலஸ்தாபனம்

[சுழிபுரம்]

வழக்கம்பரை அம்பாள் பாலஸ்தாபனம் ஆகஸ்ட் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது. 28ம்திகதி வெள்ளிக்கிழமை கிரியைகள் ஆரம்பமாகும். வெள்ளிக்கிழமை மாலை திரு.கி. சுப்பிரமணிய சாஸ்திரிகளும் ஞாயிற்றுக்கிழமைபகல் செல்வ்புஷ்பா செல்வநாயகமும் சிறப்புரையாற்றுவார்கள்.

## வேண்டுகோள்

நெல்லியடி, வெள்ளி

அண்மையில் வடமராட்சிப் பகுதியில் நடந்த கோரச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் சேதங்களின் முழுவிபரங்களையும் உரிய படிவங்களையும் விரைவில் கொடுத்து முடிக்குமாறு வடமராட்சிப்பகுதி பிரஜைகள் குழு ஒன்றியத் தலைவர் திரு. ஜே. ஜீ. இராசேந்திரம் கேட்டுள்ளார்.

## வசந்தகுமாரி தலைமையில் சங்கீத மகாநாடு இசை விழா

(சென்னை)

சென்னை நுண்கலை மன்றம் நடத்தும் 55-வது தென் இந்திய சங்கீத மகாநாடும் இசைவிழாவும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 17 ம் திகதி முதல் ஜனவரி மாதம் 2ம் திகதி வரை நடைபெறுகிறது.

சுவாமி சங்கரதாஸ் கலை அரங்கத்தில் நடைபெறும் இம் மகாநாட்டுக்கும் இசைவிழாவுக்கும் பிரபல சங்கீத வித்துவான் திருமதி எம். எல். வசந்தகுமாரி தலைமை தாங்குவார்.

இவ்வைபவத்தில் திருமதி வசந்தகுமாரி 'சங்கீத கலா சிகாமணி' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளார்.

## மின் தாக்கி மரணம்

நெல்லியடி, வெள்ளி

கரவெட்டியைச் சேர்ந்த ஐயம்பிள்ளை பொன்னம்பலம் (50 வயது) என்பவர் மின்சாரத் தாக்குதலால் உடனடியாக இறந்தார்.



# ஈழ. தே. ஜ. வி. முன்னணி உயர் ஆணைக்குழு அமைப்பு

[யாழ்ப்பாணம்]

ஈழத்தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் எதிர்காலப்பணிகளுக்கு தலைமை வகித்து வழிகாட்டும் பொருட்டு உயர் தலைமை அங்கமாக ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், ஈழத்தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளுக்கும் உயர் ஆணைக்குழுவே முழு அதிகாரம் உடையதாகும் என்றும் தன் செயலாளர்கள் சென்னையில் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

உயர் ஆணைக்குழுவின் பொதுச் செயலாளர் திரு. டக்ளஸ் தேவனந்தாவும் துணைச்செயலாளர் திரு. ஈஸ்வரனும் இவ்வறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்.

கடந்த 17ம் திகதி முதல் 21ம் திகதிவரை சென்னை கே. கே. நகரில் நடைபெற்ற ஈ என். டி. எல். எவ். கூட்டத்தில் உயர் ஆணைக்குழுவும் அதன் செயலாளர்களும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் பிராந்திய மேன்மையை வழிகாட்டவும் பொதுச்சபை ஒன்றும் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உயர் ஆணைக்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் டக்ளஸ் தேவானந்தா, ஈஸ்வரன், ரமேஷ், அசோக், செல்வம், அசோக், பார்த்தீபன் ஆகிய ஏழுபேர் தெரிவாகியுள்ளனர்.

[மா]

## மூன்றும் தவணை 31ல் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் மூன்றும் தவணைக்காக இ மாதம், 31 ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

## இவ்வாரம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இவ்வாறு முகாம்களில் சுமார் 5000 தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (சி

## யோகாசன பயிற்சி

[யாழ்ப்பாணம்]

சுவாமி ஸ்ரீ சச்சானந்தயோகி அவர்கள மீண்டும் தமது யோகாசன வகுப்புகளை நல்லை ஆதீனத்தில் ஆரம்பித்துள்ளார்.

தினமும் காலை மாலை வேளைகளில் நடைபெறும் இவ்வகுப்புகளில் சேர்ந்து பயில விரும்புகிறவர்கள் ஆதீனத்தில் சுவாமிகளுடன் தொடர்பு கொள்ளலாம்.

அகில இலங்கை யோகாசன ஸ்தாபனம் என்ற தமது ஸ்தாபனத்தின் பெயரை ''ப்ராண யோகஸ்தாபனம்'' என மாற்றியமைத்துள்ளதாகவும் சுவாமிகள் அறிவித்துள்ளார்.

## இந்திய-இலங்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகளினதும் இரத்தத்தினால் சிவந்த எமது மண்ணில் இப்பொழுது வெள்ளைச்சாயப் பூசப்பட்டுள்ளது. இதனால் தமிழரின் அபிலாஷைகள் தீர்க்கப்படமாட்டாது.

இந்திய-இலங்கை ஒப்பந்தப் தமிழர் பிரச்னையை முன்வைத்துசெய்யப்பட்டதாகஇருந்தாலும் எமது எதிரியும் இன்னொரு நாடும் செய்துகொண்ட ஒப்பந்தமாகையால் எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது.

எமது சுதந்திரம் பாதுகாக்கப்படும் என்பதற்கு எந்த விதமான உத்தரவாதமுமில்லை கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் தமது இருப்பிடங்களிலிருந்து விரட்டப்பட்ட இடங்களில் நாலு இலட்சம் சிங்களவர்கள் குடியேற்றப் பட்டுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் யோகி பேசுகையில் கூறியதாவது;

இடைக்காலத்தீர்வு எதுவும் நிரந்தரமான அமைதியைத் தராது. குறுகிய காலத்தில் இந்திய அரசின்நிலைப்பாட்டை எல்லோரும் புரிந்து கொள்வீர்கள். இலட்சியத்தில் எப்போதும் உறுதியாக இருக்கும் எங்களின் முடிந்த முடிவு தமிழீழ தாயகம்தான்.

இந்திய அரசு எமக்கு வழங்கிய உறுதி மொழிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை கிழக்கு மாகாணத்தில் கடந்த இரண்டரை மூன்றரை வருடமாக காடுகளிலே வாழ்ந்த மக்கள் இன்றும் காடுகளில்தான் வாழ்கிறார்கள்.

## அரச அதிபரிடம் வேண்டுகோள்

(நெடுந்தீவு)

பல வழிகளாலும் பாதிக்கப்பட்டிருக்கும் நெடுந்தீவு மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்குமாறு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபருக்கும், யாழ். அரசாங்க அதிபருக்கும் அவசர வேண்டுகோள் ஒன்றை நெடுந்தீவு பிரஜைகள் குழுச் செயலாளர் ஏ. டபிள்யூ அரியநாயகம் விடுத்துள்ளார்.

## பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வித் திணைக்கள வளர்ந்தோர் கல்விப் பிரிவும், கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையமும் இணைந்து நடாத்தும் பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நெறி மீண்டும் இன்று சனிக்கிழமைமுதல் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரியில் அமைந்துள்ள கல்வி மூலவள நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது. [எ]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு கந்தையா தம்பிராசா

(சமாதான நீதவான்-J P.)

(ஓய்வுபெற்ற அதிபர்)

தோறறம்: 12-04-1928


மறைவு: 09 09-1986

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து பொது நலச்சேவைக்கே தன்னை அர்ப்பணித்த அன்புத் தெய்வமே! தங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி,
உறவினர்கள்.
''தம்பிரத்தினமகால்'',
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(சி 0683)

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



ஜோசப் ரவீந்திரன் [மகாராஜா]

தோற்றம்: 29-07-1964

மறைவு: 30-06-1986

கண்ணைப் பேணிக் காத்தோம்,கருத்தொடும் வளர்த்தோம் உன்னை, எண்ணரும் குணங்கள் கொண்ட எம்மரும் செல்வமே, நீ துண்ணென எம்மையெல்லாம் துயர்க் கடல் விட்டே சென்றாய், விண்ணை நீ அடைந்தாலும் நெஞ்சினில் நினைத்துள்ளாயே

உமது பிரிவால் துயருறும்: தந்தை. தாய், சகோதரிகள், சகோதரன், மைத்துனர், மற்றும உறவினர்.

21/7, அர்ச்.
அந்தோனியார் சதுக்கம்,
அவரிவத்தை றோட்,
வத்தளை.

தபால்கந்தோர்முன்பாக,
அச்சுவேலி.

குருவத்தை,
சுன்னாகம். (சி 0075)

## 31-ம நாள் நினைவஞ்சலி



திரு. விநாயகமூர்த்தி மாணிக்கம்

(மலாயன் பென்சனியர்)


மலர்வு: 11 03-1891

உதிர்வு: 30-07-1987

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய், பாசத்தின் பிறப்பிடமாய், சிரிப்பின் நிறைமதியாய், குடும்பத்தின் ஒளி விளக்காய், வாழ்வின்வழி காட்டியாய்த் திகழ்ந்து எம் அனைவரையும் ஆளாத்துயரில் ஆழ்த்தி விட்டு மறைந்த எம் அன்புத்தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.
19, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். (சி 0686)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் நல்லதம்பி இராஜதுரை

தோற்றம்: 17-05-62

மறைவு: 29-05-87

29-08-87(இன்று)அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்அந்தியேட்டிக் கிரியைகளில் அனைவரும் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்

பிரிவால் துயருறும்
மனைவி, குடும்பத்தினர்,
சகோதரர்கள்,
சகோதரி.
கொற்றாவத்தை,
அவரம்பிட்டி.

(சி-0701)


## 'தொழிற் பயிற்சிகள்''

JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA

தமிழ் மாணவர்களின் தற்போதைய
நிலைமையை முன்னிட்டு குறைந்த
கட்டணங்களில் இலகுவாக வேலைவாய்ப்பு
பெறக்கூடிய முறையில்
தொழிற் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

★ COMPUTER PROGRAMMING & DATA PROCESSING IN BASIC LANGUAGE.
60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 3 மாதம். முழுக் கட்டணம்:- 750/-.

★ றேடியோ, ரெலிவிஷன் றிப்பியறிங்.
ரெலிவிஷன், றேடியோ திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 3 மாதம். முழுக் கட்டணம்:- 750/-.

★ வீடியோ டெக் றிப்பியறிங்.
காலம்:- 2 மாதம். முழுக் கட்டணம்:- 600/-.

★ றீவைண்டிங்
மின் மோட்டர், மின் விசிறி, ரான்ஸ்போமர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

★ எலெக்றிக்கல் வயறிங்.
வீட்டு மின்சார வேலை, மின்சாரப் பொருள்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 2 மாதம். முழுக் கட்டணம்;- 500/-.

★ DIPLOMA IN DRAUGHTSMANSHIP.
காலம்:- 3 மாதம். முழுக் கட்டணம்:- 400/-.

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம் [ வார நாள் 31-08-87
வார இறுதி நாள் 30-08-87

O/L படித்த இரு பாலாரும் சேரலாம். 15 மாணவர் மட்டுமே ஒரு பயிற்சி வகுப்பில் சேர்க்கப்படுவர்.

விபரங்களிற்கு:-

# JAFFNA TECHNICAL INSTITUTE

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமை), யாழ்ப்பாணம். | தபால்கந்தோர் வீதி, (தபால் கந்தோர் அருகாமை), நெல்லியடி. | பிரதான வீதி, (பாமஸி அருகாமை), மானிப்பாய். | கண்டி வீதி. (யூனியன் பேக்கரி அருகாமை), சாவகச்சேரி. |

குறிப்பு:- கிளிநொச்சி, வவனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் 15-09-87ல் எமது நிறுவனத்தினால் மேற்குறிப்பிட்ட பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. சேர விரும்புவோர் மேற்குறித்த விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

(ஏ-2108)

# துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 சிங்களவர் காயம்!


[திருமலை நிருபர்]

இந்திய அமைதி காக்கும் படையினர் கடந்த ஞாயிறு அன்று திருமலை-மடத்தடிச் சந்தியில் இடம்பெற்ற சம்பவமொன்றல் துப்பாக்கிப்பிரயோகம்செய்து கூட்டத்தைக் கலைக்க நேர்ந்தபோது மூன்று சிங்களவர்கள் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

மடத்தடிச் சந்தியிலுள்ள பெரிய மரமொன்றின் உச்சியில் புலிக் கொடியொன்று பறக்கவிடப்பட்டிருந்தது. இதனை அகற்றுவதற்குப் பெரும்பான்மைக் கோஷ்டியொன்று முயற்சித்தபோது அதைத் தமிழர் கோஷ்டியொன்று தடுக்க முற்பட்டதையடுத்து இரு கோஷ்டிகளுக்கு மிடையில் பலமணிநேரம் மோதல் நீடித்தது.

இச்சம்பவத்தையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த இந்திய அமைதி காக்கும் படையினர் அமைதியை நிலைநாட்ட வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இதையடுத்து இரு கோஷ்டிகளும் கலைந்து சென்றதுடன் சிங்கள சமூகத்தைச் சேர்ந்த மூவரும் காயமடைந்தனர்.

இதேவேளை அன்றிரவுமுழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டதனால் நகர் இருளில் மூழ்கியது



பாண்டியன்தாழ்வு ரெட்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் அண்மையில் நடாத்திய 7 பேர் காண்ட 12 ஓவர் கிரிக்கெட் போட்டியில் ஈச்சமோட்டை சனசமூக நிலையம் 'A' பிரிவு வெற்றிபெற்றது. இருப்பவர்கள் [இ-வ]: எஸ். தவச்செல்வம், ஏ இ. ராஜேந்திரம் [தலைவர்], ஏ. செல்வராஜா. நிற்பவர்கள் [இ-வ]: எஸ். சிவகாந்தன், எஸ். சிவாநிதி, ஏ. ராஜா, ஏ. கிரிஸ்ரி, எஸ். சோதிலிங்கம்.

# இடமாற்றம் பெற்றுள்ள கிராமசேவை அலுவலர்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில் செப்டம்பர் முதலாம் தேதி முதல் இடமாற்றம் பெற்றுள்ள கிராம சேவை அலுவலர்கள் விபரம் வருமாறு:

| பெயர் | தற்போதைய இடம் | புதிய இடம் |
|---|---|---|
| ரி. சிறிபாலன் | அரியாலை(கி)— | அரியாலை (கி) |
| ஆர். சண்முகநாதன் | நல்லூர் | அரியாலை[மே] |
| எம். மயில்வாகனம் | அரியாலை(மே) | அரியாலை[ம] |
| கே. கந்தசாமி | வண்ணார்பண்ணை [வ.மே] | வண்ணார்பண்ணை [வ.மே] |
| கே.பஞ்சலிங்கம் | நல்லூர் | வண்ணார்பண்ணை [வ.கி] |
| எஸ். மகாலிங்கம் | வண்ணார்பண்ணை[வ.கி] | கந்தர்மடம் |
| என். நவரத்தினராசா | நல்லூர் | நல்லூர்[வ] |
| என். சண்முகலிங்கம் | நல்லூர் | நல்லூர் [தெ] |
| கே. சிவராசா | நல்லூர் | திருநெல்வேலி[மே] |
| எஸ். குமாரசாமி | திருநெல்வேலி | திருநெல்வேலி[கி] |
| எஸ். வசந்தகுமார் | கோண்டாவில் [மே] | கோண்டாவில் [மே] |
| எஸ். கனகலிங்கம் | கோண்டாவில்[கி] | கோண்டாவில்[கி] |
| என். ஜெகதீஸ்வரன் | கொக்குவில்[கி] | கொக்குவில்[கி] |
| பி. தர்மபாலன் | கொக்குவில்(மே) | கொக்குவில்[மே] |
| கே. யோகேஸ்வரன் | நல்லூர் | கொக்குவில்[ம] |
| பி. சற்குணராசா | சுதுமலை | சுதுமலை |
| வி. சந்திரராஜா | ஆனைக்கோட்டை | ஆனைக்கோட்டை |
| பி. சிவபாதசுந்தரம் | சண்டிலிப்பாய் | உயரப்புலம் |
| ஐ. நித்தியானந்தன் | நவாலி | நவாலி |
| ரி. சபாரெட்ணம் | மானிப்பாய் | மானிப்பாய் |
| எஸ். கந்தசாமி | சண்டிலிப்பாய் | சண்டிலிப்பாய் |
| வி. சுந்தரலிங்கம் | சண்டிலிப்பாய் | மாகியப்பிட்டி |
| ரி. நித்தியானந்தன் | சண்டிலிப்பாய் | சங்கானை [வ] |
| ஆர். துரைராஜா | சங்கானை [வ] | பண்டத்தரிப்பு |
| பி. கபிரியேல்பிள்ளை | பண்டத்தரிப்பு | சில்லாலை |
| எஸ். சுர்தரமூர்த்தி | மாதகல் | மாதகல் |
| எஸ். பி. யோகராசா | சண்டிலிப்பாய் | மாதகல் [கி] |
| வி. நடராஜா | பெரியவிளான் | பெரியவிளான் |
| ஏ. முருகேசு | வட்டு. [கிழ] | வட்டு. [கிழ] |
| பி. சந்திரகுமார் | சுழிபுரம் | சங்கரத்தை |
| ரி. கதிர்காமநாதன் | சங்கானை | அராலி [வ] |
| கே. ஜெகதீஸ்வரன் | அராலி [வ/மே] | அராலி [மே] |
| பி. தர்மகுலசேகரம் | அராலி [தெ/கி] | அராலி [தெ/கி] |
| எஸ். நாகரெட்ணம் | சங்கானை | வட்டு. [தெ] |
| கே. சிறிகரன் | வட்டு [மே] | வட்டு. [மே] |
| கே. தர்மலிங்கம் | தொல்புரம் | தொல்புரம் |
| எஸ். வைத்தியநாதன் | சங்கானை | பொன்னாலை |
| எஸ். கே. பாலசிங்கம் | மூளாய் | மூளாய் |
| எம். தர்மதாசன் | சுழிபுரம் [மே] | சுழிபுரம் [மே] |
| பி. ரட்ணம் | சங்கானை | சுழிபுரம் [கி] |
| ரி. இராசபாலன் | சங்கானை [கி] | சங்கானை [கி] |
| என். சந்திரசேகரம்பிள்ளை | சங்கானை | சங்கானை [தெ] |

(தொடரும்)

## சங்க ஊழியர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கடந்த புதன்கிழமை இரவு வட்டுக்கோட்டைத் தொகுதி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு சு. நடேசு இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு மேற்படிசங்க ஊழியர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# யாழ் வரும் பொருள்கள் தடைமுகாமில் அபேஸ்!

## சாரதி மீதும் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருட்கள் மற்றும் குளிர்பானங்களை ஏற்றிவரும்லொறிகளின் சாரதி, 'கிளினர்'மாரை தடைமுகாம்களிலுள்ள இராணுவத்தினர் பயமுறுத்தித் தாக்கிவருவதாகவும், லொறிகளிலிருந்து பொருட்களை அபகரித்து வருவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பயமுறுத்தல்களும், பொருள் அபகரிப்புகளும் காளாவி, வவனியா, நொச்சியாகம ஆகிய இடங்களிலுள்ள அரச இராணுவ, பொலிஸ் தடை முகாம்களிலே நடைபெற்று வருகிறதாம்.

மேலும் கொழும்பிலிருந்து குளிர்பானங்களை ஏற்றிவரும் லொறிகளிலிருந்து குளிர் பானப் பெட்டிகளைத் தடைமுகாம்களிலுள்ள இராணுவத்தினர் தங்கள் பாவனைக்கு எடுப்பதுமல்லாமல் மேலதிகமான பெட்டிகளைக் கடைகளுக்கு விற்றுவருவதாகவும், இதுபற்றி அவர்களிடம் கேட்டால் சாரதி, கிளினரை அவர்கள் தாக்க வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வா]

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

காரைநகர் கோவளம் இளைஞர் மன்ற வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மன்றவிளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

மன்றத்தலைவர் திரு. செ. தருமராசா தலைமையில் நடைபெறும்இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக டாக்டர் கே. அம்பிகைபாகன் கலந்துகொள்வார். (சி)


# தேவை

# லக்ஸ்பிறே பிரதிநிதிகள்

லக்ஸ்பிறே விநியோகம் செய்வதற்கு, பின்வரும் பிரதேசங்களில், உள்ளூர் முன்னணி வியாபாரிகள், லங்கா மில்க் ஃபுட்ஸ் நிறுவனத்தின் கையிருப்பாளர்களாகத் தேவை

- மட்டக்களப்பு,
- வாழைச்சேனை,
- செங்கலடி,
- கந்தளாய்,
- மூதூர்,
- கிளிநொச்சி,
- முல்லைத்தீவு.

நாட்டம் உள்ளோர், தயவு செய்து உங்கள் வர்த்தக நிறுவனத்தின் சுருக்கமான விபரத்துடன் வர்த்தகப் பதிவுப் பத்திரத்தின் போட்டோப் பிரதி ஒன்றை இணைத்து விற்பனை மனேஜருக்கு எழுதுங்கள்

விற்பனை மனேஜர்,
லங்கா மில்க் ஃபுட்ஸ் (சீடபிள்யூஈ) லிமிடெட்
வெலிசறை ருகம

ZENITH


## மூளைக்காய்ச்சலுக்கு சிறுவன் பலி

[பலாலி]

மூளைக்காய்ச்சல் நோயினால் மூன்றரை வயது சிறுவன் ஒருவர் மரணமானார்.

அளவெட்டி மணற்புலத்தைச் சேர்ந்த இராசலிங்கம் ஜெயந்தன் என்பவரே மரணமானவராவார்.

## லண்டனிலும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையிலிருந்து வெளியேறியுள்ள மார்க்ஸிட் கம்யூனிஸ்ட்கட்சிஒன்றுடன் அவருக்கிருக்கும் தொடர்புகள்பற்றி விசாரிக்கப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

## மாருதி கார்கள்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

மாதம் ஏற்றுமதி செய்யப்படவிருப்பதாகவும் அவர் கூறினார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் மறைந்த திருமதி இந்திரா காந்தியின் 2வது புதல்வர் காலஞ்சென்ற சஞ்சேய் காந்தியினால் ஆரம்பிக்கப்பட்ட இக்கார் உற்பத்தி நிலையத்தில் பல சிக்கல்களுக்குப்பின் இதுவரை 80,1[illegible]0 கார்கள் உற்பத்திசெய்யப்பட்டது என்பதும் இவ்வாண்டு 10 கோடி 20 லட்சம் ரூபா இந்நிறுவனத்திற்கு லாபமேற்பட்டதும் குறிப்பிடத்தக்கது.


# வேலைவாய்ப்புக்கள்

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள எமது படமாளிகைகளில் கடமைபுரிய

- ★ சினிமா மெசின் ஒப்பிரேட்டர்கள்
- ★ புக்கிங் கிளாக்குகள்
- ★ டிக்கெற் செக்கர்கள்
- ★ சிற்றூழியர்கள்
- ★ காவலாளிகள்
- ★ தலைமைக் கந்தோர் பியன்கள் [ஆங்கில அறிவுடையோர்]

உடன் தேவை.

சினிமாத்துறையில் அனுபவமுள்ளவர்கள் விரும்பப்படுவர்.

நற்சான்றிதல்களின் பிரதிகளுடன் உடன் விண்ணப்பிக்கவும்.

## சினிமாஸ் லிமிட்டெட்,

117, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு-13.

(ஏ 2125)

## உலகவங்கி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னும் குறிப்பிட்டதுறையில் ஒருவருடத்திற்கு மேல் அனுபவம் உள்ள சகலரும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

எமது தொழிலாளர்களின் எதிர்கால நன்மைகருதி மேற்கொள்ளப்படும் இத்திட்டம் குறித்த மேலதிக விபரங்களை தொழிற்பயிற்சி முகாமையாளர், தேசிய தொழிற்பயிற்சி சபை. 3ம் மாடி, சவோய் கட்டிடம் காலி வீதி, என்ற விலாசத்தில் கடிதமூலமோநேரிலோ பெற்றுக்கொள்ளலாம். என தேசிய தொழிற் பயிற்சி சபையின் அதிகாரி திரு. எம். சிவயோகசுந்தரம் தெரிவித்துள்ளார்

இப்பரீட்சைத்திட்டம் பற்றிய விபரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் உடனடியாகப்பெற விரும்புவோர் நாளை ஞாயிறு முதல் செப்டம்பர் மாதம் 3ம் திகதி வரை காலை 9 மணியில் வந்து 12 மணிவரை தம்மை கொக்குவில் யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் சந்தித்துப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் திரு சிவயோகசுந்தரம் எமது நிருபரிடம் தெரிவித்தார்.

## புனர்வாழ்வு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்

### அகதிகள் ஸ்தாபனம்

இதேவேளை இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தத்தையடுத்து அகதிகளை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளுக்கு என 6கோடி ரூபாயை உடனடியாக வழங்க அதிகளுக்கான ஐ. நா. அலுவலகம் தீர்மானித்துள்ளது. [ஊ]

## யாழ். நகரில்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

சங்கிலி காப்பைக்கழற்றி இதில் வைத்துச் சத்தியம் செய்'' எனக் கேட்க, அதை நம்பிய குறித்த அந்த வயோதிபபெண் அவ்வாறே கழற்றி சத்தியம் செய்ய முயற்சித்தபோது திடீரென இருவரும் நகைகளை பறித்துக்கொண்டு ஓடி மறைந்துவிட்டனர்

பொருள்களை இழந்தபெண் அழுதவாறு சென்று யாழ். ஆஸ்பத்திரிப் பொலிஸ் பிரிவில் இயங்கும் குற்றச்செயல் முறைப்பாட்டுப் பிரிவில் முறைப்பாடுசெய்து சென்றார்.

இவ்வாறு சத்தியம் செய்வித்து பொருள்களை அபகரிக்கும் முறையில் திருடப்பட்ட இத்திருட்டு யாழ்ப்பாணத்தில் இத்துடன் ஏழாவது தடவையாக இடம்பெற்றுள்ளதுகுறிப்பிடத்தக்கது. (கு)

## கடைசி நேர வரிவிளம்பரம்

### வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரில் இருநது தருவிக்கப்பட்ட மணமகளின் தலைச்சோடனைகள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ள கனகசபை தர்மகுலசிங்கம், கருங்காலி, காரை நகர். 190/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சி–0723

### தேவை

யாழ் பசாரில் உள்ள பலசரக்குக் கடை ஒன்றுக்கு நல்ல அனுபவமுள்ள பங்காளர் ஒருவரும், காசாளர், விற்பனையாளரும் தேவை. விபரங்களுக்கு எதிர்வரும் 30-8-1987 இல் ஞாயிற்றுக்கிழமையும், திங்கட்கிழமையும் கே. கே. எஸ். வீதியில் உள்ள கே. எஸ். பென்ஸியில் காலை 9 மணி முதல் 12 மணி வரையும் நேரில் சந்திக்கவும். ஆண்கள் மட்டும் தேவை. சி-0729

## இடைக்கால

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள்நீர்ப்பாசன அதிபர் திரு. ஏ மகேஸ்வரன், யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம், யாழ். பிரதேசபிரஜைகள முசெயலாளரும், யாழ் செஞ்சிலுவைச்சங்கத் தலைவருமான சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், முன்னாள் உணவு விவசாய ஸ்தாபன உத்தியோகத்தர் திரு என். சச்சிதானந்தன் ஆகியோரின் பெயர்களை விடுதலைப்புலி சமர்ப்பித்துள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

தமிழர் விடுதலை கூட்டணி, முன்னாள் மன்னார் எம். பி. திரு. சூசைதாசன் வட மாகாண நிர்வாக சபைக்கும், முன்னாள் எம். பி. திரு. ஆர் சம்பந்தனை கிழக்கு மாகாண நிர்வாக சபைக்கும் நியமித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஜனாதிபதியினால் இச்சபைகளுக்கு நியமிக்கப்படுபவர்களில் சில அரசாங்க எம். பிக்களும் இடம் பெறுவார்கள் என்றும், ஆலோசனை சபைகள் பற்றி ஜனாதிபதி விரைவில் முடிவு செய்வார் என எதிர்பார்க்கப்படுவதாக அரச உயர் மட்ட வட்டாரங்களிலிருந்து அறியப்படுவதாகவும அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்கான சிவில் நிர்வாகத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கான சகல உதவிகளைவழங்குவதற்கு இச்சபைகள் பூர்வாங்க பொறுப்புகளை ஏற்று செயல்படும் என்றும், வீதி, ரயில் பாதை, தொலைதொடர்புகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளை மீண்டும் நடைமுறைப்படுத்த உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மில் உள்ள கடற்படைப் பிரிவில் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.''

நாட்செல்லுமாயின் அந்த 'அவுட்போர்ட்' இயந்திரங்கள் துருப்பிடித்துச் செயலிழக்கலாம் என்று லெப். இலங்கக்கோன் தெரிவித்தார்.

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் காட்டு வைரவர் கோயில் சங்காபிஷேகம் நாளை 30ந் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு உற்சவம் ஆரம்பமாகும். தொடர்ந்து சுவாமி வீதிவலம் இடம் பெறும். அன்றைய தினம் அன்னதானமும்வழங்கப்படும்.

## நயினாதீவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ததே. இங்கு கடற்படைத் தொகுதியொன்றும், ராணுவத் தொகுதியொன்றும் உள்ளன.

இதே நேரத்தில் காங்கேசன் துறையில் இலங்கைக் கடற்படைத் தளமொன்று அமைக்கப்படவுள்ளதாக நம்பகரமான வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

காங்கேசன்துறை ஹாபர் வியூ ஹோட்டலுக்கு அருகாமையில் அமைக்கப்படவுள்ள இம்முகாம், துறைமுகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென அமைக்கப்படவுள்ளதாக இவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (ஊ)

---

A/L 88
Day Class

10 30: காவிகள்
11-45: திரிகோண கணிதம்

ஆரம்பம்: 3 -9-87

திரு. ரவிமோகன்

யாழ்ப்பாணம்

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

சி-0719

---

## 5-வது ஆண்டு நினைவு



சின்னத்தம்பி
செல்லத்துரை
(நிறைவேற்றுப் பொறியியலாளர்)

தோற்றம்: 16- 2- 1943

மறைவு: 29- 8- 1982

அன்பும், பண்பும், அறிவும் ஆற்றலும் கொண்ட எம்குடும்பத் தலைவா! ஆண்டுகள் ஐந்து கடந்தாலும் உங்கள் நினைவு இன்றும் பசுமையாகவே உள்ளது. உங்கள் நாமம் வாழ்க!

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்,
உறவினர்கள்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

(சி-0717)

---

## அந்தியேஷ்டி சபிண்டிகரண அழைப்பு

27-05-1987-இல்
சிவபதமெய்திய
அமரர்

மு. கணபதிப்பிள்ளை
(புலவர்)
(ஆசிரியர், உடுப்பிட்டி, மகளிர் கல்லூரி)

திருமதி இராஜேஸ்வரி
கணபதிப்பிள்ளை
(ஆசிரியை இந்துக்கலவன் பாடசாலை, வல்வெட்டி)

செல்வன்
க. ஸ்ரீகணேஷ்குமார்
(மாணவன், ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

அவர்களது அந்தியேஷ்டி, சபிண்டிகரணக் கிரியைகள் நிகழும் பிரபவ ஷூ ஆவணி மீ திகதி (31-08-87) அதிகாலை அன்னாரின் இல்லத்தில் ஆரம்பமாகி நடைபெறும். அத்தருணம் அவர்களின் உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் இவ் அழைப்பிதழை ஏற்றுச் சமூகந் தந்து சபையைச் சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். மூவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக!!

கண்ணகை அம்மன்
கோவிலடி, கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

இங்ஙனம்
மகன் ஸ்ரீ ராஜ்குமார்
(ஹாட்லிக் கல்லூரி)

திரு திருமதி
சத்தியமூர்த்தி.

[சி-0728]

---

# கிளிநொச்சி விவசாயபீடம் 25 ஏக்கர் காணி சுவீகரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கிளிநொச்சியில் அமைக்கவிருக்கும் விவசாயவிஞ்ஞான பீடத்திற்கான காணி பல்கலைக்கழக நிர்வாகத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது

கண்டி வீதியில் விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு அண்மையில் உள்ள 25 ஏக்கர் காணியே இதற்காகப்பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

உத்தேச விவசாய பீடத்தில் அமைக்கப்படவுள்ள கட்டிடங்களுக்கான வரைபடங்களும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் விவசாயபீடத்திற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதாக பல்கலைக்கழக உயர் அதிகாரி ஒருவர் கூறினர்.

## உலகத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிதழ் வெளியீட்டு விழாவை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகள் இன்று சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு தொடக்கி வைக்கவுள்ளார்

---

## தேவை

மிது வீடியோ மூவிஸ் நிறுவனத்தை

நிர்வகித்து நடத்தக்கூடிய
திறமையுள்ள மகளிர் ஒருவர் தேவை.
உடன் விண்ணப்பிக்கவும்.
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**மிது வீடியோ மூவிஸ்**
பிரதான வீதி, சித்தன்கேணி.

(எ - 2131)

---

பை Fவ் ஸ்ரார் கொம்பனி
சங்கானை

எமது புதிய நிறுவனத்திற்கு
இரும்புப் பொருட்கள், மின்சாரப் பொருட்கள்
விற்பனை கொள்முதலில் அனுபவமுள்ள ஒருவர்
உடனடியாகத் தேவை.
நேர்முகத் தேர்வுக்கு தொடர்புகொள்ளவும்.

**பைFவ்ஸ்ரார் கொம்பனி**
பிரதான வீதி, சங்கானை.

(எ - 2130)

---

## 91-ம் நாள் நினைவஞ்சலி



சின்னப்பொடி
(இளையதம்பி)
அருளானந்தம்
(உரிமையாளர் உமா கருஜ், வியாபாரிமூலை)

மலர்வு: 15-08-1943
உதிர்வு: 31-05-1987



அருளானந்தம்
சுதாகர்
(ஹாட்லிக் கல்லூரி ஏ. எல் மாணவன்)

மலர்வு: 23-11-1969
உதிர்வு: 31-05-1987

குடும்ப விளக்காய் குணக்குன்றாய்
கூடி வாழ்ந்தீர் தீயவரால்
இடுக்கணுற்று மறைந்தாலும்
இதயம் தன்னில் வாழ்கின்றீர்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி
அ. பரமேஸ்வரியும்,
பிள்ளைகளும்.

அன்பு அம்மாவும்,
சகோதரிகளும்,
தம்பியும்.

'கயிலை'
அல்வாய் வடக்கு, அல்வாய். (சி 0716)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
சனிக்கிழமை 29-8-87

# "வடக்கு - கிழக்கு அதிகாரம் தமிழ் மக்களின்கையில் இருக்கவேண்டும்"

## - நவசமசமாஜ கட்சி

(கா. யோகநாதன்)

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை சற்று ஆழமாக ஆராய்ந்தால் 'தாயகம்' என்ற கோட்பாடு துளிகூட இல்லை. தமிழர்களை தேசிய இனம் என்று அங்கீகரித்தால் ''தாயகம்'' அங்கு உள்ளடக்கப்பட வேண்டும். இனஅடிப்படையான உள்ளடக்கம் எதுவும் ஒப்பந்தத்தில் இல்லை.

நவ சமசமாஜகட்சி பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன நேற்று நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் இவ்வாறு கூறினர்

யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஐக்கிய தொழிலாளர் சம்மேளன பணிமனையில் திரு. வி. திருநாவுக்கரசு தலைமையில் நடந்த மாநாட்டில் மத்திய குழு உறுப்பினர்களான திரு. என். ரத்னாயக்கா, ஜி சி. டி திலகசிறி ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

''இந்த ஒப்பந்தம் ஒரு அதிகார பரவலாக்கலையன்றி வேறு ஒன்றும் இல்லை அக்டோபர் மாதத்திற்கு அப்பால் இது நிறைவேற்றப்படலாம். அதுவரை இடைக்கால ஆலோசனை சபை ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.''

''இந்த இடைக்கால அரசின் கீழ் பொலிஸ் படை உட்பட நிறைவேற்று அதிகாரம் எதுவும் இருக்குமா? படைகள் சபைக்கு கட்டுப்பட்டு உள்ளதா?''

'ஜனாதிபதி, வடக்கு கிழக்கில் தன் சொல்லுக்கு தலையாட்டுகின்ற ஒரு தமிழ் அதிகாரியை நியமித்து தமிழ் குழுக்களின் ஆலோசனையுடனும் இந்திய படைகளின் ஆதரவுடனும் இங்கு ஆட்சி நடத்தப் போகிறார். இடைக்கால அரசு இருக்கும் வரை இங்கு இந்திய படைகள் இருக்கப் போகிறது''.

''இந்த ஒப்பந்தம் இந்திய வெளிநாட்டு கொள்கைக்கு பெரும் வெற்றியாகும். ஒப்பந்தத்தால், எல்விதநன்மையும் இல்லை. ஒப்பந்தத்தின் பின்னர் கூட 'மொசாட்' வெளியேற்றப்படவில்லை. பாராளுமன்ற குண்டுவீச்சுப் பற்றி விசாரணை நடத்த இந்திய ரகசியப் பொலிஸார் அழைக்கப்படவில்லை. பிரிட்டிஷிலிருந்து பொலிஸாரை அழைத்துள்ளனர்

''வடக்கு கிழக்குப் பகுதி அதிகாரம் தமிழ் மக்கள் கையில் இருக்க வேண்டும். பொலிஸ் படை நிர்வாகம், தமிழ்மக்களின் நிர்வாகம் தமிழர் கையில் இருக்க வேண்டும்.''

## தென்பகுதிக்கு அதிரடிப்படை

(கொழும்பு)

மாத்தறை மாவட்டத்தில் எழுந்துள்ள நெருக்கடி நிலையை தவிர்ப்பதற்காக தற்போது அங்கு விஷேட அதிரடிப்படையினர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

கிழக்குப்பகுதியில் கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட இப்படையினர் தற்போது தென்பகுதிக்கு மாற்றப்பட்டு வருகின்றனர். (சி)

## "நாவற்குழியான் சம்பவம்: கண்டிக்கப்படவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

கடந்த புதன்கிழமை இரவு நாவற்குழியானில் இடம்பெற்ற சம்பவம் உண்மையானால் அது கண்டிக்கப்பட வேண்டிய தொன்றாகும் என்று ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் பேச்சாளர் திரு மு. கனகராசன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

''ஐக்கியம் ஏற்படவேண்டிய காலகட்டத்தில் தவறான தகவல்களும் தவறான நடவடிக்கைகளும் மேலும் குழப்பத்தை ஏற்படுத்துவதாக முடியும். ஆனால் மக்கள் நிதானமாகவும், உன்னிப்பாகவும் அனைத்துப் போராளிகள் அமைப்புக்களினதும் நடவடிக்கைகளையும் கவனித்து வருவதுடன் அவர்கள் என்ன, என்னசெய்வார்கள் என்பதையும் கவனித்து வருகிறார்கள். போராளிகள் அமைப்புக்களின் செயற்பாடுகளுக்கு தீர்ப்பு வழங்க வேண்டியகாலம் வந்துகொண்டிருக்கிறது. அந்த நேரத்தில் மக்கள் சரியான தீர்ப்பை வழங்குவார்களென நம்புகிறோம.'' [வா]

## "ஈழ. தே. ஜ. வி. மு. என்று ஒரு அமைப்பே உண்டு"

(யாழ்ப்பாணம்)

ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணி என்ற பெயரில் ஒருஅமைப்புத்தான் இயங்குவதாகவும் சென்னையிலிருந்து வேறொருவர் தலைமையிலான அமைப்பு எதுவும் இப்பெயரில் இயங்கவில்லை! என தான் சென்னையுடன் தொடர்பு கொண்டுஉறுதிப்படுத்தியுள்ளதாகவும் 'ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி தலைவர் திரு. ராஜன் நேற்று 'ஈழநாடு' க்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தார்.

இவ்வளவு காலமும் சொல்லொணாத்துயரை அனுபவித்து இப்போது அமைதிவாழ்க்கையை மீண்டும் ஆரம்பித்திருக்கும் தமிழ்மக்களை இவ்வாறான செய்திகள் குழப்பத்தில் ஆழ்த்தக்கூடியன என்று திரு. ராஜன் மேலும் தெரிவித்தார்.

## இன்று கருத்தரங்கு

(மாவிட்டபுரம்)

வலி வடக்கில் இராணுவ நடவடிக்கையால் உளரீதியான பாதிப்புகளுக்கிலக்கான மக்களின் நிலைகுறித்து ஆராயும் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை வலி. வடக்கு பிரஜைகள் குழுக்களின் ஒன்றிய பணிமனையில் நடைபெற உள்ளது.

## வட கிழக்கில் 10,000 இந்திய படையினர்

லண்டன், ஆக. 28

இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் பத்தாயிரம் இந்தியப் படையினர் தற்போது உள்ளதாக 'வெரித்தாஸ் வானொலி' அறிவித்துள்ளது.

இலங்கை - இந்திய உடன்படிக்கையையடுத்து அமைதி காக்கும பணிக்கென இந்திய படையினர் வடக்கு, கிழக்கில் பரவலாக இருப்பது தெரிந்ததே. (ஊ)

## மர்மநபர் பிடிபட்டார்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய்ப் பகுதியில் வாள்போன்ற ஆயுதங்களுடன் மர்மமாக நடமாய 5 பேர்கொண்ட கோஷ்டியின் தலைவரொருவர் நேற்று அவ்வூர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டார்

பிடிபட்ட இந்நபர் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பிடிபட்ட இந்நபர் மானிப்பாய்செக்காலையைச் சேர்ந்தவராவார்.

## மரண அறிவித்தல்

### வைரமுத்து நமசிவாயம்

பருத்தித்துறை 2ம் குறுக்குத் தெருவை சேர்ந்தநி அள்ளை அத்தியட்சகராக கடமையாற்றி, இளைப்பாறிய வைரமுத்து நமசிவாயம் 26-08-87 அன்று காலமானார். இவர் திருமதி நல்லம்மாவின் அன்புக் கணவரும், அரியரட்ணம் [சாம்பியா], நரேந்திரன், ராஜேந்திரன், ஜெயரட்ணம் (லண்டன்), செல்லம்மா, செல்வதி [அவுஸ்திரேலியா], செல்வதேவி, [பெங்களூர்] செல்வராணி, செல்வராஜி [லண்டன்], ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு கந்தப்பிள்ளை, திரு. சோமசேகரம், திரு சனகசூரியர். திரு பாலசுப்பிரமணியம், திரு. சுந்தரலிங்கம் ஆகியோரின் மாமனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-08-87 இன்று சனிக்கிழமை மாலை 4மணியளவில் நெல்லண்டை இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பருத்தித்துறை வெளிச்சவீட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர் நண்பர்கள், யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : ந. ராஜேந்திரன்.
நெல்லண்டை. பருத்தித்துறை. [சி 0700)

### சுந்தரம்பிள்ளை சோமசுந்தரம்



புங்குடுதீவு 11-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் இல 8, ஆடியபாதம் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. சுந்தரம்பிள்ளை சோமசுந்தரம் (செல்வானந்தம், பங்காளர் கொழும்பு. சிவசண்முகராஜா அன் கோ, யாழ். மயூதரன் அன் கோ) காலமாகிவிட்டார். அன்னார் சிவயோகத்தின் அன்புக் கணவரும், காலம் சென்ற சுந்தரம்பிள்ளை சின்னம்மாவின் அருமை மகனும், வைரமுத்து கற்பகத்தின் அருமை மருமகனும கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன், ஸ்ரீதரன் பாஸ்கரன், தயாபரன், சுகந்தினி சசீகரன் பிரதீபன் ஆகியோரின் அருமைத் தந்தையும், லெட்சுமணன், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாகேஸ்வரியின் அருமைச் சகோதரனும் முத்துலிங்கம் (பிரான்ஸ்), கிஷ்ணலிங்கம் (ஜெர்மனி), நவரெத்தினலிங்கம் ஆகியோரின் அத்தானுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 29-08-87 இன்று சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள். சி-0693

## வடக்கு, கிழக்குக்கு பத்து பிரிட்டிஷ் ஜீப்புகள்

லண்டன். ஆக 28.

இலங்கைக்கு பத்து லாண்ட் ரோவர் வாகனங்களை வழங்க பிரிட்டன் முடிவு செய்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சீர்குலைந்துள்ள போக்குவரத்துச் சேவைகளைச் சீர்படுத்தும் நடவடிக்கைகளில் இவை ஈடுபடுத்தப்படவுள்ளதாக பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

இவற்றில் 4 வாகனங்கள் உடனடியாக வழங்கப்பட்டுள்ளன. (ஊ)

## வடக்கு, கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விலும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று இடம்பெறவுள்ளது.

ஒப்பந்தத்தின் பின்னர் சிங்களக் குடியேற்றம், இடம்பெயர்ந்த தமிழர் மீண்டும் குடியேற்றப் படாமை, வவுனியாப் பகுதியில் தொடர்ந்து வரும் இராணுவ வன்முறை, ஒப்பந்தத்தின் பின்னரும் பூஸாவில் இருந்து கைதிகள் விடுதலை செய்யப்படாமை போன்ற காரணங்களையிட்டே வவுனியாவில் இன்றைய ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம்பெறுகிறது.

நேற்றுக் காலை அம்பாறையில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் திருக்கோவிலில் இருந்து புத்தம்பையில் உள்ள இந்திய இராணுவ முகாம் வரையும் ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

நேற்று முன்தினம் இரவு மன்னாரில் உள்ள நாவற்குழியான் என்னும் இடத்தில் உள்ள ஒரு வீட்டில் திடீரென புகுந்த ஆயுதந்தரித்த மூன்று பேர், பன்னீர் என்ற ஒருவரை தாக்கியுள்ளார்கள். நீர் எல். ரி. ரி. ஈ. உதவியாளரா? எனக் கேட்டு தாக்கி உள்ளார்கள்.

நேற்று முன்தினம் மன்னாரில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து கோப்பாய் கந்தசாமி கோவில், கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் கோவில், உரும்பிராய் ஞான வைரவர் கோயில், திருநெல்வேலி இந்து இளைஞர் சங்க மண்டபத்திலும் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன.

## கொடியேற்றம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்கப் பிள்ளையார் கோவில் உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து விழா நடைபெற்று எதிர்வரும் 6ம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

## அமைச்சர் இராசு வேண்டுகோள்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதிகளிலிருந்து வெளியேறியபௌத்த பிக்குகளையும், சிங்கள மக்களையும் மீண்டும் அப்பகுதிகளில் குடியேறுமாறு பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சர் திரு. செ. இராசதுரை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கான சகல வசதிகளையும் தமது அமைச்சு செய்து கொடுக்குமென்றும் விரைவில் அனைவரையும் அங்கு திரும்புமாறும் அவர் கேட்டுள்ளார். (சி)

## "கொலையே எமது தொழில்"

[கொழும்பு]

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை கொழும்பில் அணிவகுப்பு மரியாதையின் போது தாக்கிய கடற்படைச் சிப்பாய் விஜேமுனி கொழும்பு கோட்டைப் பதில் மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்டு மீண்டும் தடுப்புக்காவலில்வைக்கப்பட்டார்.

அவர் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது வெள்ளை 'ரீஷேர்ட்' அணிந்திருந்தார். அதில் பின்வரும் வாசகங்கள் காணப்பட்டன. ''கொலைப் படை; கொலையே எமது தொழில்; நாம் அதனையிட்டுப் பெருமிதமடைகிறோம்; இத் தொழிலில் நாம்தொடர்ந்துமுன்னேறுவோம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu. P. O Box 49 Telegram, Eelanadu Telephone: — 22389, 24126